தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொழும்பில் தமிழக-இலங்கை மீனவர்களிடையே 13-ஆம் தேதி பேச்சுவார்த்தை



**சென்னை,**

தமிழக, இலங்கை மீனவர்களிடையே அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை கொழும்புவில் மார்ச் 13-ஆம் தேதி நடத்தப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக, இலங்கை கடற்படையினரால் ஜனவரி 27-க்குப் பிறகு சிறைபிடிக்கப்பட்ட 121 தமிழக மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க வேண்டும் என முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இருதரப்பு மீனவர்களுக்கு இடையே முதல்கட்டப் பேச்சுவார்த்தை சென்னையில் ஜனவரி 27-ஆம் தேதி நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக தமிழக மீனவர்கள் 295 பேரும், புதுச்சேரி மீனவர்கள் 22 பேரும் இலங்கை சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி, இப்போது இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

இது தொடர்பாக தமிழக அரசு ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

தமிழக, இலங்கை மீனவர்களிடையே அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தைக்கு முதல்வர் ஜெயலலிதா அனுமதி வழங்கியதோடு, இதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு மத்திய வெளியுறவு அமைச்சகத்துக்குக் கடிதம் எழுதுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, இந்தப் பேச்சுவார்த்தைக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய வெளியுறவு இணைச் செயலாளருக்கு மார்ச் 2-ஆம் தேதி கடிதம் எழுதப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில், அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தைக்கு முன்னதாக இலங்கையால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 121 மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையை ஏற்கெனவே நடைபெற்ற பொருள் நிரல்கள் அடிப்படையிலேயே நடத்த வேண்டும் எனவும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

**விவாதப் பொருள்**

* தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப்பு பகுதியான பாக் நீரிணைப்பகுதியில் செயற்கையாக வரையறுக்கப்பட்ட எல்லையை பாரபட்சமின்றி இருதரப்பும் பரஸ்பர நல்லிணக்கத்துடன் மீன்பிடித்திடும் பாரம்பரிய உரிமையை வலியுறுத்துதல்.

* முந்தைய இந்திய, இலங்கை பேச்சின்போது ஒப்புக்கொள்ளப்பட்டவாறு, இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் தாக்குதல், சிறைபிடிப்பு, நீண்டகால சிறைவாசம், மீன்பிடி படகுகளையும், வலைகளையும் பறிமுதல் செய்தல் போன்ற நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்.

* இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்படும் மீனவர்கள் அவர்களது படகுகளுடன் விரைவாகவும் சுமூகமாகவும் நாடு திரும்புவதற்கான வழிவகைகள் குறித்து விவாதித்தல்.

* பாரம்பரிய கடல் பகுதியான பாக் நீரிணைப் பகுதியில் இருதரப்பும் ஏற்றுக்கொள்ளும் வகையில் உகந்த மீன்பிடி முறைகளை தெரிவித்தல்.

* முக்கியத் தகவல்களான ஆபத்துக்கால நிகழ்வுகள், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மீன்பிடி முறைகள், அதுதொடர்பான தகவல்களை இருதரப்பினரும் பரிமாறிக்கொள்வதன் மூலம் பாக் நீரிணைப் பகுதியில் மீன் மற்றும் மீன் வளங்களை நீண்டகால வாழ்வாதாரத்துக்கு ஏற்ற வகையிலும், மீன்பிடிப்பினை சாத்தியமான தொழிலாக மேற்கொள்ளும் வகையிலும் வழிமுறைகளைக் கண்டறிதல் ஆகிய தலைப்புகளில் விவாதங்கள் நடைபெறும்.

முதல்வர் ஜெயலலிதாவால் கச்சத்தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குக்கு எந்தவித குந்தகமும் ஏற்படாத வகையில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் எனவும், இதில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் தமிழக அரசின் ஒப்புதலுக்குப் பிறகே செயல்படுத்தப்படும் எனவும் தமிழக அரசு மத்திய அரசுக்கு தெரிவித்துள்ளது.

கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் யார், யார்? மீனவப் பிரதிநிகளில் தமிழகத்தின் சார்பாக நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த கே.சிவஞானம், ஜி.வீரமுத்து, எஸ்.சித்திரவேலு மற்றும் எம்.ஜெகநாதன், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பி.ராஜமாணிக்கம், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த என்.குட்டியாண்டி, ஜி.ராமகிருஷ்ணன், ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பி.ஜேசுராஜா, யு.அருளானந்தம், எம்.எஸ்.அருள், எஸ்.பி.ராயப்பன் மற்றும் என்.தேவதாஸ் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த எம்.இளங்கோ ஆகியோர் பங்கேற்பார்கள் என மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் சென்னையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பங்கேற்றவர்கள்.

தமிழக அரசின் சார்பில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறைச் செயலாளர், மீன் வளத்துறை இயக்குநர், கூடுதல் இயக்குநர் மற்றும் துறை அதிகாரிகள் பார்வையாளர்களாக பங்கேற்பார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக, இலங்கைச் சிறைகளில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும் விடுவிக்க வேண்டும் எனவும் மத்திய அரசிடம் தமிழக அரசு கோரியுள்ளது.

**செந்துறை பகுதியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

**நத்தம்**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் வட்டம் செந்துறை, சேத்தூர், குடகிபட்டி ஆகிய ஊராட்சிகளில் மார்ச் 1 முதல் 24 ஆம் தேதி வரை கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

செந்துறையில் சனிக்கிழமை நடந்த முகாமை ஊராட்சித் தலைவர் விஜயன்சித்ரா தொடங்கிவைத்தார். ஒன்றிய கவுன்சிலர்கள் அழகாஸ்திரிக்கவுண்டர், சவரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் பாதிப்பு இருக்கிறதா என்று பரிசோதித்து, முன்னெச்சரிக்கையாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. கோமாரி நோய் வேகமாக பரவி வருவதை பொதுமக்களிடம் எடுத்துக்கூறி அதன் அறிகுறிகளை கண்டறியும் வழிமுறைகளை மருத்துவர் பொன்ராஜ் எடுத்துக் கூறினார். 250க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கபட்டன. மருத்துவ உதவியாளர்கள், ஊராட்சி உதவியாளர்கள் கலந்து கொண்டு சிகிச்சைக்கு உதவினர்.

**கால்நடைகளுக்கு காணை நோய் தடுப்பூசி முகாம்**

**தேனி,**

தேனி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் மார்ச் 6-ஆம் தேதி வரை 613 கிராமங்களில் காணை நோய் தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது என்று மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி கூறினார்.

கோட்டூரில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற காணை நோய் தடுப்பூசி முகாமை பார்வையிட்டு அவர் கூறியது:

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 34 குழுக்கள் மூலம் சனிக்கிழமை முதல் மார்ச் 6-ஆம் தேதி வரை 613 கிராமங்களில் கால் நடைகளுக்கு கால் மற்றும் வாய்க் கானை நோய் தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது.

காலை 6 மணி முதல் 9 மணி வரையும், பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரையும் முகாம் நடைபெறும். முகாம் நடைபெறும் இடம் மற்றும் நேரம் குறித்த விவரம் சம்பந்தப்பட்ட கிராம மக்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படும்.

விவசாயிகள் 6 மாத வயதுக்கு மேல்பட்ட கால்நடைகளை முகாமுக்கு அழைத்து வந்து காணை நோய் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். முகாமுக்கு கொண்டு வரப்படாத கால்நடைகளுக்கு, மேய்ச்சல் இடத்துக்கே சென்று தடுப்பூசி போட கால்நடை மருத்துவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

கால்நடை உதவி மருத்துவர்கள் ராஜசேகரன், விஜயகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## விவசாயிகளுக்கு ரூ.13 லட்சம் மானியத்தில் நவீன வேளாண் கருவிகள்: அமைச்சர் வழங்கினார்

**பரமக்குடி,**

ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் வேளாண்மை உற்பத்தியை பெருக்கிடவும், விவசாய பணிக்கான ஆள் பற்றாக்குறையை ஈடுசெய்யும் வகையில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் 33 விவசாயிகளுக்கு நவீன வேளாண் கருவிகள் ரூ 13.42 லட்சம் மானியத்தில் வழங்கப்பட்டன. கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் எஸ்.சுந்தரராஜ் சனிக்கிழமை இவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட வேளாண்மை பொறியியல்துறை செயற்பொறியாளர் எம்.யுவராஜ் தலைமை வகித்தார். உதவி செயற்பொறியாளர் எம்.சிதம்பரேசன், உதவி பொறியாளர்கள் ஆர்.சிவகுமார், டி.பாஸ்கரன், எஸ்.ஸ்ரீதரன், வி.பார்த்தசாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் எஸ்.சுந்தரராஜ் 33 விவசாயிகளுக்கு நவீன வேளாண் இயந்திரங்களை வழங்கிப் பேசியது: தமிழக முதல்வர் ஜெயலலிதா உணவு உற்பத்தியில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்ந்திட வேளாண்துறை சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் நவீன வேளாண் கருவிகள் வழங்கி வருகிறார்.

இதில் ராமநாதபுரம் மாவட்டத்தில் பவர் டில்லர் இயந்திரம் ரூ 45 ஆயிரம் மானியத்தில் 10 நபர்களுக்கும், பவர்வீடர் கருவி ரூ 1.25 லட்சம் மானியத்தில் 5 நபர்களுக்கும், 9 கொழு கலப்பை ரூ 10 ஆயிரம் மானியத்தில் 7 நபர்களுக்கும்,ரோட்டவேட்டர் ரூ 20 ஆயிரம் மானியத்தில் ஒருவருக்கும்,

செயின்சா ரூ எட்டாயிரம் மானியத்தில் ஒருவருக்கும், போஸ்ட் கோல் டிக்கர் கருவி ரூ 27 ஆயிரம் மானியத்தில் 1 நபருக்கும், மரம் அறுவை இயந்திரம் ரூ 24 ஆயிரம் மானியத்தில் 5 நபர்களுக்கும், கலப்பை ரூ 6,500 மானியத்தில் 1 நபருக்கும், வாட்டர் பம்ப் ரூ 8,750 மானியத்தில் 2 நபர்களுக்கும் மொத்தம் 33 பயனாளிகளுக்கு 35 லட்சத்து 76,740 மதிப்பிலான நவீன வேளாண் கருவிகள் ரூ 13 லட்சத்து 42,750 மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதனை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

குடிநீர் மேம்பாட்டு பணிக்கு ரூ 7.41 கோடி: மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால் நீர்நிலைகள் தண்ணீரின்றி, நிலத்தடி நீரும் கீழே சென்றுவிட்டது. இதனால் மாவட்டத்தின் வறட்சியை சமாளிக்கும் வகையில் குடிநீர் வரப்பெறாத கிராம மக்களுக்கு முறையாக குடிநீர் கிடைக்கவும், நீர் ஆதாரமுள்ள இடங்களை கண்டறிந்து ஆழ்துளையுடன் அடிபம்ப் அமைத்து குடிநீர் கிடைக்க வழிவகை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுடன் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வறட்சி குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிகளை மேற்கொள்வதற்காக குடிநீர் வடிகால் வாரியத்துக்கு ரூ 3.37 கோடியும், உள்ளாட்சித்துறைக்கு ரூ 3.03 கோடியும், நகராட்சிக்கு ரூ 1 கோடி என மொத்தம் 7.41 கோடி நிதியினை தமிழக முதல்வர் வழங்கியுள்ளார் என அவர் தெரிவித்தார்.

**"மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி கட்டாயம் போட வேண்டும்**

**'கோவை,**

கோமாரி நோய் மீண்டும் தாக்காமல் இருக்க விவசாயிகள் தங்களது மாடுகளுக்கு கட்டாயம் தடுப்பூசி போட வேண்டும் என, கால்நடைத் துறை வலியுறுத்தியுள்ளது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு கோமாரி நோய் தாக்கி பல கால்நடைகள் உயிரிழந்தன. இதையடுத்து, தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 6 மாதத்திற்கு ஒரு முறை கோமாரி தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

இந் நிலையில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கோவை மண்டலத்தில் மார்ச் 1 முதல் 21-ஆம் தேதி வரை கோமாரி தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது.

இதில், கோவை மாவட்டத்தில் சுமார் 2.41 லட்சம் மாடுகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 3 வார காலம் நடைபெறும் தடுப்பூசி முகாமின்போது விவசாயிகள், தங்களது மாடுகளை கோமாரி நோய்த் தாக்குதலில் இருந்து பாதுகாக்க கட்டாயம் தடுப்பூசி போட வேண்டும். கோவை தவிர திருப்பூர் மாவட்டத்தில் 2.3 லட்சமும், ஈரோடு மாவட்டத்தில் 2.6 லட்சம் மாடுகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தாளக்கரையில் ரூ.19 லட்சம் செலவில் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி**

**கோவை,**

பொள்ளாச்சி தாளக்கரை ஊராட்சியில் ரூ.19.05 லட்சம் செலவில் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தை வேளாண்துறை அமைச்சர் செ.தாமோதரன் சனிக்கிழமை துவக்கி வைத்தார்.

நல்லிக்கவுண்டன்பாளையத்தில் ரூ.26.6 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய கால்நடை மருந்தகக் கட்டடடத்தைத் திறந்து வைத்து, வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் உலர் தீவன விற்பனை மையத்தையும், கோமாரி நோய் தடுப்பு 6-ஆவது சுற்று மருந்து முகாமையும் தொடங்கி வைத்து, அமைச்சர் செ.தாமோதரன் பேசியது:

தாளக்கரை ஊராட்சி ஒன்றிய பொது நிதியின்கீழ், ரூ.19.05 லட்சம் மதிப்பில் சூரிய ஒளியில் இருந்து மின்சக்தியை உற்பத்தி செய்யும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறையில் 2,000 பேருக்கு சூரிய ஒளியில் மின்சக்தியில் இயங்கக்கூடிய விவசாய பம்பு செட் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரூ.5 லட்சம் மதிப்பிலான விவசாய பம்பு செட் 80 சதவீத மானியத்தில் அதாவது ரூ.4 லட்சம அளவிற்கு மானியம் வழங்கப்படுகிறது.

ரூ.26.6 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகத்திற்கு மக்களவை உறுப்பினர் வளர்ச்சி நிதியின் கீழ் ரூ.10 லட்சம் மதிப்பில் சுற்றுச் சுவர் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் கோமாரி நோய்க்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ், கால்நடைளுக்கு வைக்கோல் தீவனத்தை மானிய

விலையில் மாநிலம் முழுவதும் வழங்கிட 125 மையங்கள் அமைக்க ரூ.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் சூலூர், மதுக்கரை, கிணத்துக்கடவு, அன்னூர், பொள்ளாச்சி வடக்கு ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டு தலா ரூ.10 லட்சம் மதிப்பில் உலர் தீவன விற்பனை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

ஒரு கிலோ வைக்கோல் ரூ.2 வீதம் மானிய விலையில் ஒரு மாட்டிற்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் அதிக பட்சமாக 5 மாடுகளுக்கு 3 மாதங்களுக்கு வழங்கப்படும். உலர் தீவன விற்பனை மையங்களின் மூலம் இதுவரை 9,963 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.17 லட்சம் மதிப்பிலான வைக்கோல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 3,175 விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்றார்.

பொள்ளாச்சி எம்.எல்.ஏ. எம்.கே.முத்துக்கருப்பண்ணசாமி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் முத்து கோபாலகிருஷ்ணன், கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ஆர்.ஏ.சக்திவேல், தாளக்கரை ஊராட்சித் தலைவி இந்திராணி உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## வறட்சியால் தென்னை நார்க் கழிவுத்துகள் தேவை அதிகரிப்பு!

**கோவை,**

கடும் வறட்சி காரணமாக தென்னைநார்க் கழிவுத்துகள்களின் தேவை அதிகரித்துள்ளது. பொள்ளாச்சிப் பகுதியில் இருந்து முதன்முறையாக ஆப்பிரிக்காவுக்கு இக்கட்டிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

தென்னை நகரான பொள்ளாச்சிப் பகுதியில் சுமார் ஒரு கோடி தென்னை மரங்கள் உள்ளன. கடந்த ஆண்டு தென்மேற்கு, வடகிழக்குப் பருவ மழைகள் பொய்த்து விட்டன. இதனால் பொள்ளாச்சிப் பகுதியில் மட்டும் 20 சதவீத தென்னை மரங்கள் முழுமையாகக் காய்ந்துவிட்டன. மேலும் 20 சதவீதத்துக்கு மேற்பட்ட மரங்கள் காய்க்கும் திறனை இழந்துவிட்டன.

பொள்ளாச்சிப் பகுதியில் சில ஆண்டுகளாக தென்னை மட்டையில் இருந்து தயாரிக்கப்படும் நார் மற்றும் தென்னைநார்க் கழிவுத்துகள் கட்டிகளின் ஏற்றுமதி

அதிகரித்து வருகிறது. இப்பகுதியில் மட்டும் சுமார் 500-க்கு மேற்பட்ட தென்னைநார்த் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. நாளொன்றுக்கு ஒரு தொழிற்சாலைக்கு சுமார் 40 ஆயிரம் மட்டைகள் தேவைப்படுகின்றன. ஏற்றுமதி அதிகரிப்பதால் மட்டைகளின் தேவையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தேவை அதிகரித்ததால், கடந்த 6 மாதங்களுக்கு முன் 50 பைசாவுக்கு விற்ற தென்னை மட்டை இப்போது ரூ. 2-ஆக விலை உயர்ந்துள்ளது. இங்கு தென்னை மட்டை கிடைக்காத காரணத்தால், கேரளம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் இருந்து தினமும் 20 லோடு முதல் 40 லோடு வரை தென்னை மட்டைகள் கொண்டு வரப்படுகின்றன. பொள்ளாச்சியில் இருந்து கொரியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிக அளவில் தென்னைநார்க் கழிவுத்துகள் கட்டிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. முதன்முறையாக இந்த ஆண்டு பொள்ளாச்சியில் இருந்து ஆப்பிரிக்காவுக்கும் கழிவுத்துகள் கட்டிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

வீட்டுக் காய்கறித் தோட்டம்: வீடுகளின் மாடிகளில் காய்கறித் தோட்டம் அமைக்குமாறு தமிழக அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. வீடுகளின் மாடியில் தோட்டம் அமைக்கும் பகுதியில் கழிவுத்துகள் கட்டிகளை மண்ணுடன் கலந்து பயிரிடுவதால் மகசூல் அதிகரிப்பதுடன் தண்ணீரின் தேவையும் குறைகிறது. இதனால் கழிவுத்துகள் கட்டிகளின் தேவை அதிகரித்துள்ளது. மேலும் வறட்சியால் வாடும் தென்னை மரங்களைக் காப்பாற்றுவதற்காக மரத்தைச் சுற்றிலும் இக்கழிவுத் துகள்களைப் பரப்புகின்றனர். இதனால், தினமும் தென்னை மரத்துக்குத் தண்ணீர் விடுவதற்குப் பதிலாக, 4 அல்லது 6 நாள்களுக்கு ஒருமுறை தண்ணீர் விட்டால் போதுமானதாக இருப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

தண்ணீரைச் சேமிக்க வேண்டுமானால் கழிவுத்துகள் கட்டியைப் பயன்படுத்துங்கள் என்ற கோஷம், இப்போது புதிதாக பொள்ளாச்சியில் உள்ள கழிவுத்துகள் கட்டி உற்பத்தியாளர்களிடம் எழுந்துள்ளது. ஒரு கிலோ கழிவுத்துகள் கட்டி 8 கிலோ தண்ணீரைத் தன்னுள் தாங்கும். இதனால் தென்னை மரத்தைச் சுற்றிலும் ஈரம் இருந்து கொண்டே இருக்கும். அதற்காகவே கடந்த சில ஆண்டுகளாக விவசாயிகள், வறட்சியின்போது கழிவுத்துகள்களை தென்னை மரத்தின் வேரைச் சுற்றிலும் பரப்பி ஆயுள்காலப் பயிரான தென்னையைக் காப்பாற்றி வந்தனர்.

பொள்ளாச்சிப் பகுதியில் இருந்து மட்டும் தென்னைநார்க் கழிவுத்துகள் கட்டி ரூ. 250 கோடிக்கு மேல் ஏற்றுமதியாவது குறிப்பிடத்தக்கது. இப்போது தேவை அதிகரித்துள்ளதால் தினமும் ரூ. 50 முதல் ரூ. 75 லட்சம் வரையிலான நார்க் கழிவுத்துகள் கட்டிகள் ஏற்றுமதியாகி வருகின்றன. இந்நிலையில் போதிய அளவில் தென்னை மட்டை கிடைக்காததால், உற்பத்தியாளர்கள் பலர் தங்கள் உற்பத்தியையும் பொள்ளாச்சிப் பகுதியில் குறைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**வேளாண்மைச் சங்கத்தில் ரூ. 39 லட்சம் கொப்பரை ஏலம்**

**பெருந்துறை,**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ. 39 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் போனது.

சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள், 945 மூட்டைகளில், 46 ஆயிரம் கிலோ கொப்பரையைக் கொண்டு வந்திருந்தனர்.இதில், முதல்தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 86.40-க்கும், அதிகபட்சமாக ரூ. 88.55-க்கும் விற்பனையானது. இரண்டாம் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 63.15-க்கும், அதிகபட்சமாக ரூ. 84.60-க்கும் ஏலம் போனது. மொத்தமாக ரூ. 39 லட்சத்துக்கு ஏலம் மூலமாக கொப்பரை விற்பனையானது.

**மொடக்குறிச்சி ஒன்றியத்தில் கோமாரி தடுப்பூசி முகாம்**

**மொடக்குறிச்சி,**

மொடக்குறிச்சி ஒன்றியத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், தேசிய கோமாரி தடுப்புத் திட்டத்தின் கீழ் 6-ஆவது சுற்றாக மொடக்குறிச்சி ஒன்றியத்தில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி சனிக்கிழமை காலை துவக்கி வைக்கப்பட்டது.

குளூர் ஊராட்சிக்கு உள்பட்ட காதக்கிணறு பகுதியில் நடைபெற்ற முகாமில் மொடக்குறிச்சி ஒன்றிய துணைத் தலைவர் கணபதி வரவேற்றார். ஈரோடு ஆவின்

தலைவரும், முன்னாள் அமைச்சருமான பி.சி.ராமசாமி, மாவட்ட கவுன்சிலர் சிவசுப்பிரமணி, ஆவின் இயக்குனர் அசோக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மொடக்குறிச்சி எம்எல்ஏ ஆர்.என்.கிட்டுசாமி கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணியைத் துவக்கிவைத்தார். ஞாயிற்றுக்கிழமை (இன்று) கோவிந்த நாயக்கன்பாளையம், தாளமடைநகர், 3-ஆம் தேதி தொட்டிபாளையம், திருஞானசம்மந்தபுரம் உள்ளிட்ட பகுதிகளிலும், தொடர்ந்து 21-ஆம் தேதி வரை தடுப்பூசி போடும் பணி நடைபெறுகிறது.

## 5.26 லட்சம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி: ஆட்சியர் ஆய்வு

**வேலூர்,**

வேலூர் மாவட்டத்தில் அனைத்து கிராமங்களிலும் சனிக்கிழமை முதல் கால்நடை பராமரிப்புத் துறையினர் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியை மேற்கொண்டுள்ளனர். இப்பணி வரும் 21-ம் தேதி வரை நடைபெறுகிறது.

சனிக்கிழமை மட்டும் மாவட்டத்தில் 23 ஆயிரத்து 520 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டதாகவும், மாவட்டத்தில் 5.26 லட்சம் மாடுகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் கால்நடைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வேலூரை அடுத்த அரியூர் திருமலைக்கோடி பகுதியில் நடைபெற்ற தடுப்பூசி முகாமை ஞாயிற்றுக்கிழமை ஆட்சியர் இரா.நந்தகோபால் பார்வையிட்டார். கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் கமலநாதன், உதவி இயக்குநர் மனோகரன் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

## 660 விவசாயிகளுக்கு தென்னங்கன்று, வேளாண் உபகரணங்கள்

**ஆம்பூர்,**

முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாளையொட்டி, வேலூர் புறநகர் மேற்கு மாவட்ட விவசாயப் பிரிவு சார்பில் ரங்காபுரம் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்த விழாவில் 660 விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள், விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு வேலூர் புறநகர் மேற்கு மாவட்ட விவசாயப் பிரிவுச் செயலர் பொறியாளர் ஆர். வெங்கடேசன் தலைமை வகித்தார். இதில் தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கே.சி. வீரமணி கலந்துகொண்டு 660 விவசாயிகளுக்கு தென்னங்கன்று, வேளாண் உபகரணங்கள், ஊர் பொதுமக்களுக்கு வேட்டி, சேலை, ஆயிரம் பேருக்குப் பிரியாணி, ஆம்பூர் சட்டப்பேரவைத் தொகுதியில் பிப்ரவரி 24-ம் தேதி பிறந்த பெண் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் ஆகியவற்றை வழங்கினார். தமிழக அரசின் சாதனை விளக்க வாகனப்

பிரசாரத்தையும் தொடங்கி வைத்தார்.

ஆம்பூர் நகர அதிமுக செயலர் எம். மதியழகன், பேர்ணாம்பட்டு ஒன்றிய செயலர் சி.வி. வெங்கடேசன், மாதனூர் ஒன்றியச் செயலர் ஜெ. ஜோதி ராமலிங்கராஜா, ஆம்பூர் தொகுதிச் செயலாளர் அகரம்சேரி ஆர். வெங்கடேசன், பேர்ணாம்பட்டு ஒன்றியக் குழுத் தலைவர் டி. பிரபாகரன், வெங்கடசமுத்திரம் ஊராட்சி மன்றத் தலைவர் ரஞ்சிதம் கிருஷ்ணன், ஒன்றியக் குழு உறுப்பினர் வசந்தா நாகராஜ் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## எண்ணெய் வித்து பயிர்களில் ஒருங்கிணைந்த பாதுகாப்புப் பயிற்சி

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலையை அடுத்த நல்லான்பிள்ளை பெற்றாள் கிராமத்தில் எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

முகாமுக்கு ஊராட்சித் தலைவர் அருணாசலம் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் கவிதா வரவேற்றார். திருவண்ணாமலை வேளாண்மை உதவி இயக்குநர் இரா.பெரியசாமி கலந்து கொண்டு எண்ணெய் வித்து பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தார்.

பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க நல்ல விதைச்சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்த வேண்டும். மணிலாவில் சுருள் பூச்சியைக் கட்டுப்படுத்த தட்டைப்பயிறு மற்றும் உளுந்து பயிர்களை ஊடு பயிராகப் பயிரிடலாம் என்றார் இரா.பெரியசாமி.

உயிர் உரங்கள், நுண்ணுரங்கள், ஜிப்சம் பயன்படுத்தும் முறைகள் குறித்து வட்டார விரிவாக்க உதவியாளர் சிவலிங்கம் விளக்கினார். உதவி வேளாண் அலுவலர் விஸ்வநாதன் பயிற்சி முகாமுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

**கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்**

**அரியலூர்,**

அரியலூர் மாவட்டத்தில் கால்நடைகளை தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்க தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது.

கால்நடைகளை தாக்கும் முக்கிய நோய்களில் ஒன்று கால்நோய், வாய்நோய் என்கிற கோமாரி (கசப்பு) நோயாகும். இந்த நோய் தாக்காத வண்ணம் இருப்பதற்கு மாடுகளுக்கு ஆண்டுக்கு இரு முறை தடுப்பூசி போடப்படுகிறது. அரியலூர் மாவட்டத்தில் மார்ச் 1 முதல் 21-ம் தேதிவரை தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே கால்நடை வளர்ப்போர் தங்கள் கிராமத்துக்கு தடுப்பூசி குழுவினர் வரும்போது தங்களின் அனைத்து மாடுகளுக்கும் தவறாமல் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம் தொடக்கம்**

**பொன்னமராவதி,**

பொன்னமராவதியில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் சனிக்கிழமை தொடங்கியது.

தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நடைபெறும் இம்முகாம் மார்ச் 21-ம் தேதி வரை நடைபெற உள்ளது. பொன்னமராவதி பகுதியில் ஒவ்வொரு வார்டு வாரியாக கோமாரி நோய் தடுப்பூசி முகாம் போடப்பட்டு வருகிறது. இதுகுறித்து கால்நடை உதவி இயக்குநரும், மருத்துவருமாகிய எ. நவநீதகிருஷ்ணன் கூறியது: சினை மாடுகள், பால்மாடுகள் உள்ளிட்ட அனைத்து மாடுகளுக்கும் இந்த தடுப்பூசியை போடலாம். எனவே பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

### ரெட் ரிங் இறால் வரத்து குறைவு: மீனவர்கள் கவலை

**காரைக்கால்,**

ஆழ்கடலில் கிடைக்கும் ரெட் ரிங் இறால் வரத்து தொடங்கியிருந்தாலும், அவை எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லையென மீனவர்கள் தெரிவித்தனர்.

10 கிராம் முதல் 200 கிராம் எடை கொண்டவை கடல் இறால்கள். இவை வகைகளுக்கேற்ப சுவையிலும் மாறுபட்டு உள்ளன. இதில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் சுவையுடையவை சிங்க இறால், தக்காளி இறால் எனப்படும் ரெட் ரிங் இறால். இவை பொதுவாக கேரளம் மற்றும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

சிகப்பு நிறத்தில் உள்ள இந்த இறால் ஜனவரி மாத இறுதியில் தொடங்கி ஏப்ரல் மாதம் வரை கிடைக்கக் கூடியது. ரெட் ரிங் இறால் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில், கூட்டம் கூட்டமாக கடலில் சுற்றி வரும்போது, மீனவர்கள் வலையில் சிக்குகின்றன. இதுகுறித்து மீனவர்கள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது:

கடலுக்குள் 30 முதல் 50 கி.மீ. தொலைவில் இவை கிடைக்கின்றன. இவை 2 ,3 நாட்கள் கடலில் தங்கி மீன் பிடிப்போர் வலையில் அதிகமாக சிக்க வாய்ப்புண்டு, சீசன் தொடங்கியது முதல் குறைந்த அளவுதான் கிடைக்கிறது. கிலோ ரூ. 200 முதல் 250 வரையில் விற்பனை செய்யப்படுகிறது. இந்த இறாலை கேரள மாநில முகவர்கள் வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். அதிகமாக கிடைக்காததால் போதுமான லாபம் இல்லை எனக் கூறினர்.

### களியக்காவிளையில் மிதமான மழை

**களியக்காவிளை,**

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை மிதமான மழை பெய்தது.

இப்பகுதியில் கடந்த சில நாள்களாக கோடை வெப்பம் அதிகமாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை பகலிலும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது.

இந்நிலையில் மாலை 4 மணிக்கு மேல் வானில் திடீரென மேகம் சூழ்ந்து மிதமான மழை பெய்தது. தொடர்ந்து அரை மணி நேரத்துக்கும் மேலாக மழை பெய்தது.

இந்த மழை காரணமாக களியக்காவிளை மற்றும் அதையொட்டிய பகுதிகளில் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது.

### 72 பேருக்கு ரூ. 14.40 லட்சம் கடனுதவி

**சாத்தான்குளம்,**

புத்தன்தருவை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 72 பேருக்கு ரூ. 14.40 லட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. சாத்தான்குளம் அருகேயுள்ள புத்தன்தருவை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் சிறுதொழில் செய்ய மத்திய காலக் கடன் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவுக்கு, சங்கத் தலைவர் சி. காமராஜ் தலைமை வகித்தார். மத்திய கூட்டுறவு வங்கி சாத்தான்குளம் சரக மேற்பார்வையாளர் ஏ.பி. முருகன், கிளை மேலாளர் ஜெயசீலி ஜூலியட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு கடன் சங்கச் செயலர் அருள்தாஸ் வரவேற்றார். இதில், 72 பேருக்கு ரூ 14.40 லட்சம் கடனுதவிகள் வழங்கப்பட்டன. இதில், சங்க துணைத் தலைவர் அப்துல்ரகுமான், புத்தன்தருவை ஊராட்சித் தலைவர் சித்திரைக்கனி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் நீ. கதிரவஆதித்தன், ஒன்றியக்குழு உறுப்பினர் தங்கத்துரை , சாத்தான்குளம் ஒன்றிய டாக்பியா சங்க செயலர் பெனிஸ்கர் உள்ளிட்ட கடன் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

### கால்நடை மருத்துவ முகாம்

**திருச்செந்தூர்,**

திருச்செந்தூரில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு திருச்செந்தூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க ஒன்றியத்தலைவர் அ.கோவிந்தன் தலைமை வகித்தார். ஆவின் நிறுவன மேலாளர் தங்கையா முன்னிலை வகித்தார். மருத்துவக்குழுவினர் கால்நடைகளை பரிசோதனை செய்து சிகிச்சை அளித்தனர். நிகழ்ச்சியில் நகர கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் ஆறுமுகம், எஸ்.முத்துகிருஷ்ணன், சி.சேகர், டி.காசி, கோபால், பட்டாணி, எஸ்.சுப்பையா, குருசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். பால்வளத்துறை மேலாளர் கலைச்செல்வி நன்றி கூறினார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ரூ.2,144 கோடி கடன் வழங்கல் : ஐ.ஓ.பி., செயல் இயக்குனர் தகவல்

**பெரம்பலூர்:** தஞ்சை மண்டலத்தில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில், 2,144 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது, என, வங்கியின் செயல் இயக்குனர், சாவலி தெரிவித்தார்.பெரம்பலூர் வந்த அவர் கூறியதாவது: இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு, நாடு முழுவதும், 3,200 கிளைகள் உள்ளன. கடந்த, இரண்டு ஆண்டுகளில், 1,000 கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. இலங்கை, பாங்காக் ஆகிய நாடுகளில், கிளைகள் திறக்கப்பட்டுள்ளன; துபாயில் விரைவில், கிளை திறக்கப்பட உள்ளது. தஞ்சை மண்டலத்தில், 1,793 கோடி ரூபாய், முன்பணம் திரட்டப்பட்டு, 2,144 கோடி ரூபாய், கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், வேளாண்மைக் கடனாக, 1,110 கோடி ரூபாயும், கல்வி கடனாக, 214 கோடி ரூபாயும் அடங்கும். இவ்வாறு, அவர் கூறினார்.

### கோடையால் முட்டை உற்பத்தி சரிவு : தேசிய அளவில் விலை உயர்வு

கோடை துவங்கி விட்டதால், முட்டை உற்பத்தி குறைந்து வருகிறது; அதனால், நாமக்கல் மண்டலத்தில், கடந்த, 28 நாட்களில், முட்டை ஒன்று, 15 காசு வரை, விலை உயர்ந்துள்ளது. தேசிய அளவிலான முட்டை உற்பத்தியில், ஆந்திரா, தமிழகம், மகாராஷ்டிரா உள்ளிட்ட, மாநிலங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை; அந்தந்த பகுதியில் உள்ள, தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் பரிந்துரைபடி, பண்ணை மற்றும் கொள்முதல் விலை, நிர்ணயம் செய்யப்படுகின்றன.உள்நாட்டு தேவை, வெளிநாட்டு ஏற்றுமதி, உற்பத்தி செலவு மற்றும் நுகர்வை அடிப்படையாகக் கொண்டு, தினமும் முட்டை விலை நிர்ணயம் செய்யப்பட்டு, விற்பனைக்கு வருகின்றன. தற்போது, கோடை காலம் துவங்கி விட்டதால், முட்டைக் கோழி, வெப்பத்தை தாங்க முடியாமல் பல்வேறு நோய்களுக்கு ஆளாகுகின்றன. இதனால், முட்டை உற்பத்தி, சரிவை நோக்கிச் செல்கின்றன.வரும்,ஜூன் வரை, கோடை காலம் இருப்பதால், பண்ணையாளர்கள், கோழி வளர்ப்பில், அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். இந்நிலையில், கடந்த, 28 நாளில், நாமக்கல் மண்டலத்தில், முட்டை விலை, 15

காசு வரை உயர்ந்துள்ளது. கடந்த, பிப்., 1ம் தேதி, 3.30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, நேற்று முன் தின நிலவரப்படி, 3.45 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டன. "கோடை துவங்கி விட்டதால், கோழிகள் முட்டையிடும் எண்ணிக்கை குறைந்து; மொத்த உற்பத்தி குறைந்து வருகிறது. வரும் நாட்களில், முட்டை விலை, தேவைக்கு ஏற்ப உயரும்' என, பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

### ராமேஸ்வரத்தில் இரட்டைமடி வலையில் மீன்பிடித்த படகுகளில் அதிகாரிகள் ரெய்டு

**ராமேஸ்வரம்:** ராமேஸ்வரத்தில் இரட்டைமடி வலையில் மீன்பிடித்த படகுகளை, மீன்துறை மற்றும் போலீஸ் அதிகாரிகள், ரெய்டு நடத்தியதால், மீனவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். அரசு தடை செய்த இரட்டைமடி, சுருக்கு மடி வலைகளில், விசைப்படகு மீனவர்கள் மீன் பிடிப்பதால், மீன் வளம் அழிவதாக, நாட்டுப்படகு மீனவர்கள் புகார் தெரிவித்து, போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர். இந்நிலையில், 14 நாட்களுக்கு பின், மார்ச் 1ல், மீன்பிடிக்க சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள், தடை செய்த இரட்டைமடியை பயன்படுத்தி, பேசாளை பகுதியில், மீன் பிடித்ததாக, மீன்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. மீன்துறை துணை இயக்குனர் கார்த்திகேயன், டி.எஸ்.பி., விஜயகுமார் தலைமையில் அதிகாரிகள், ராமேஸ்வரம் கடற்கரையில், ரெய்டு நடத்தினர். இதனால், 300க்கும் மேற்பட்ட விசைப்படகு மீனவர்கள், பேசாளை மீன்களை கரையில் இறக்க முடியாமல், 7 மணி நேரம் தவித்தனர். ஆத்திரமடைந்த அவர்கள், ராமேஸ்வரம் தேவர் சிலை அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர். அவர்களை, மீனவர் சங்க தலைவர்கள் சமரசம் செய்தனர். மறியலால், 10 நிமிடம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதில், பிடிக்கப்பட்ட பேசாளை மீன்களை, கரைக்கு கொண்டு வருவதுடன், நாளை (மார்ச் 4) முதல் தடை செய்த மடியை பயன்படுத்துவதில்லை என, மீனவர்கள் உறுதியளித்தனர். இதையடுத்து, அவர்கள் பிடித்த மீன்களை கரையில் இறக்க அனுமதிக்கப்பட்டது. ராமேஸ்வரம் மீன்துறை உதவி இயக்குனர் கோபிநாத் கூறுகையில், தடை செய்யப்பட்ட வலையை பயன்படுத்திய படகுகள் மீது, உயர் அதிகாரிகள் ஆலோசனைப்படி, நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என்றார்.

## வரத்து குறைவால் மீன் விலை திடீர் உயர்வு

**சென்னை** : மீன்வரத்து குறைவால், சென்னையில் மீன் விலை திடீரென அதிகரித்துள்ளது. விலைஉயர்ந்தாலும், சந்தையில் மக்கள் கூட்டம் குறையவில்லை.தமிழகத்தில், கடந்த சில நாட்களாக மீன் விலை திடீரென அதிகரித்துள்ளது. சென்னை சந்தைகளிலும் வழக்கத்தை விட மீன் விலை 20 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. சில தினங்களுக்கு முன், 580, 600 ரூபாய்க்கு விற்ற முதல் ரக வஞ்சிரம், 700 ரூபாய்க்கும், 340 ரூபாய்க்கு விற்ற இரண்டாம் ரக வஞ்சிரம், 400 ரூபாய் வரையும் விற்கிறது. முதல்தர இறால், 1,200 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 380 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. குறைந்த விலையில் கிடைத்த, 'துக்கடா' மீன்களின் விலையும் வெகுவாக அதிகரித்துள்ளது. மீன் விலை அதிகரித்து இருந்தாலும், மீன் சந்தைகளில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.விலை உயர்வுக்கான காரணம் குறித்து, மீனவர்கள் கூறியதாவது: தமிழகம் - இலங்கை மீனவர்கள் சமரச பேச்சின்படி, மார்ச் 10ம் தேதி வரை, நாகப்பட்டினம், ராமேஸ்வரம் உள்ளிட்ட, தமிழக மீனவர்கள், கச்சத்தீவு பகுதிக்கு மீன் பிடிக்க செல்லவில்லை.இதனால், பிற மாவட்டங்களில் இருந்து வரத்து குறைந்து விட்டது. சென்னையிலிருந்து, வியாபாரிகள் அதிக விலை கொடுத்து பிற மாவட்டங்களுக்கு அனுப்புகின்றனர். கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களில் இருந்து வரத்து குறைந்து விட்டது. அதனால் விலை அதிகரித்துள்ளது. விலை குறைய ஒரு மாதம் வரை ஆகலாம்.இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## வரத்து குறைவால் மீன் விலை உயர்வு

**கீழக்கரை:** ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை, ஏர்வாடி உள்ளிட்ட பகுதிகளில் வல்லம், நாட்டுப்படகு மூலம் மீன்பிடிக்கப்படுகிறது. வரத்து குறைவு, வெளியூர் வியாபாரிகள் போட்டியால் மீன் விலை உயர்ந்துள்ளது. விலை உயர்வு: கிலோ 20க்கு விற்ற சூடை மீன் 40க்கும், 100க்கு விற்ற வில மீன் 140க்கும், 120க்கு விற்ற ஊளி 160க்கும், 90க்கு விற்ற முறல் 140க்கும், 120க்கு வாள மீன் 160 ரூபாய்க்கும் விற்கிறது. நண்டுக்கு கிராக்கி ஏற்பட்டதால் கிலோ 260 ரூபாய் வரை விற்கப்பட்டது. வெளியூர் வியாபாரிகள் கடற்கரைக்கு நேரடியாக சென்று ஏலம் எடுப்பதால், மார்க்கெட்டிற்கு பெரிய மீன்கள் வரத்து குறைந்து விட்டது.

## காபி பூக்களால் ரம்மியம்

**கூடலூர்** : கூடலூர் பகுதியில் பூத்து குலுங்கும் காபி பூக்களின் அழகு, அதன் வாசனை உள்ளூர் மக்களை வெகுவாக கவர்ந்து வருகிறது. கூடலூர் பகுதியில் தேயிலைக்கு அடுத்தபடியாக விவசாயிகள் காபி உற்பத்தியில் அதிகம் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு சிறிதும், பெரிதுமாக சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் காபி பயிரிட்டுள்ளனர். இதில், 11 ஆயிரம் ஏக்கர் "ரொபஸ்டா' காபியும், 4000 ஏக்கரில் "அரேபிக்கா' காபியும் பயிரிட்டுள்ளனர். சில விவசாயிகள், தேயிலை தோட்டங்கள் இடையே ஊடு பயிராக காபி செடிகளையும் பயிரிட்டு பயனடைந்து வருகின்றனர். ஆண்டு தோறும் "ரொபஸ்டா' காபி பிப்ரவரி மாதத்திலும், "அரேபிக்கா' காபி ஏப்ரல், மே மாதங்களில் பூ பூக்கும். கடந்த சில நாட்களாக மொட்டுகளாக காணப்பட்ட காபி பூக்கள் நேற்று காலை முழுமையாக பூக்க துவங்கியது. பச்சை செடிகளுக்கு இடையே, வெண்மையாக காட்சியளிக்கும் காபி பூக்களும், அதன் வாசனையும், உள்ளூர் மக்கள் மட்டுமின்றி, வெளிமாநில சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்து வருகிறது. "எதிர்பார்த்தது போன்று, இந்த ஆண்டு காபி செடிகளில் நன்றாக பூ பூத்துள்ளது; சில நாட்கள் கோடை மழை பெய்தால், நல்ல மகசூல் கிடைக்கும்; கோடை மழை பொய்த்தால், மகசூலில் பாதிக்கும்' என விவசாயிகள் தெரிவித்தனர்.

## தேயிலை கொள்முதலுக்கு "எலக்ட்ரானிக்' தராசு அவசியம்

**மஞ்சூர்** : "தேயிலை கொள்முதல் மையங்களில் தொடரும் குளறுபடிகளை தடுக்க, "எலக்ட்ரானிக்' தராசு அமைக்க வேண்டும்' என, அங்கத்தினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். தொழிற்சாலை நிர்வாகம் சார்பில் கொள்முதல் மையங்களில் "வில்' தராசு மூலம் பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. தற்போது "வில்' தராசு பயன்படுத்துவதால், குளறுபடிகள் நடப்பதாக அங்கத்தினர்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்." இந்த தில்லு முல்லை தடுக்கும் வகையில், அனைத்து கொள்முதல் மையங்களில் எலக்ட்ரானிக் தராசு பயன்படுத்த வேண்டும்' என, அங்கத்தினர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த கோரிக்கை குறித்து உயர் அதிகாரிகள் தரப்பில் ஆலோசிக்கப்பட்டு, கொள்முதல் மையங்களில் எலக்ட்ரானிக் தராசு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. "குன்னூர்

இன்கோ சர்வ் நிர்வாகம் விரைவில் இதனை அமுல்படுத்த வேண்டும்' என, அங்கத்தினர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இரண்டு நாளில் 40 டன் வைக்கோல் விற்பனை

**திண்டுக்கல்:** மானிய விலை வைக்கோல் விற்பனை மையங்களின் மூலமாக கடந்த இரண்டு நாட்களில் 40 டன் வைக்கோல் மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. தீவன பற்றாக்குறையை தவிர்ப்பதற்காக திண்டுக்கல் மாவட்டத்தில் மானிய விலையிலான பத்து வைக்கோல் விற்பனை மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. வேடசந்தூர் பகுதியில் உள்ள 10 கிளை மையங்களின் மூலம் இரண்டு நாட்களில் 40 டன் வைக்கோல் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மற்ற மையங்களில் அதிகபட்சமாக 5 டன் வைக்கோல் விற்பனை செய்யப்பட்டுள்ளது. நேற்று 20 டன் வைக்கோல் மையங்களில் விற்பனைக்காக வியாபாரிகளால் அனுப்பி வைக்கப்பட்டது. அதிக கூட்டத்தை தவிர்ப்பதற்காக ஒருநாள் முன்னதாக விவசாயிகளுக்கு டோக்கன் வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு நாளில் ஒவ்வொரு மையங்களிலும் அதிகபட்சமாக டோக்கன் பெற்ற 150 விவசாயிகளுக்கு மட்டுமே வைக்கோல் விற்பனை செய்ய வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பற்றாக்குறையில்லாமல் வைக்கோல் கிடைப்பது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## அவக்கடா பூக்கள் கைகொடுக்குமா : மலை விவசாயிகள் கவலை

**தாண்டிக்குடி**: பருவ மழையின்றி வறட்சி நீடித்து வரும் தாண்டிக்குடி மலைப்பகுதியில் கோடை சீசனிற்கு அவக்கடா பூக்கள் பூத்துள்ளன. இவை காயாக மாறி கைகொடுக்குமா அல்லது உதிர்ந்துவிடுமா என்ற கவலை விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது. இரு ஆண்டுகளாக சீதோஷ்ண நிலை மாற்றமடைந்து மலை விவசாயங்கள் பாதித்து வருகின்றன. இதில் பருவ மழை பொய்த்தாலும் தக்க தருணத்தில் விவசாயிகளுக்கு அவக்கடா கைகொடுத்து வருகிறது. காரணம் விளைச்சல் குறைந்த நிலையில் விலை உயர்வு ஆறுதலை தந்துள்ளது. பெரும்பாலான மரங்கள் மழையின்றி வண்டு குடைச்சல், வேர் தாக்குதல் காரணமாக பட்டு போயுள்ளன. கடந்த சீசனில் துவக்கத்தில் கிலோ ரூ.20 துவங்கி ரூ.70 வரை விலை கிடைத்தது. தற்போது ஒரு கிலோ அதிகபட்சமாக ரூ.150 வரை விற்பனையாகிறது. கோடை சீசன் துவங்க உள்ள நிலையில் மரங்களில் பூக்கள்

அதிகளவு பூத்து குலுங்கியும், பாதி விளைச்சலில் காய்களும் காணப்படுகிறது. இவை முழுமை பெற வேண்டுமானால் மழை அவசியம் என்ற நிலை உள்ளது. இல்லையேல் பூக்கள் உதிர்ந்து மகசூல் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது, என விவசாயிகள் தெரிவித்தனர்.

## மூணாறில் சுற்றுலாப்பயணிகள் விரும்பி சாப்பிடும் பனை "நுங்கு'

**மூணாறு**: சுற்றுலாப் பயணிகள் உட்பட அனைவரும், விரும்பி வாங்கிச் செல்வதால், பனை "நுங்கு' க்கு, கிராக்கி ஏற்பட்டுள்ளது. சுற்றுலாப் பகுதியான மூணாறில் நிலவும் மாறுபட்ட கால நிலை, தேயிலை, காப்பி, ஏலம் மற்றும் காய்கறி, பழ வகைகள் சாகுபடிக்கு ஏற்றதாகும். தவிர தென்னை, பனை மரங்கள் இல்லை. ஆகவே, இவற்றில் இருந்து கிடைக்கும் பொருட்கள், கேரளாவின் பிற பகுதிகளில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் கொண்டு வரப்பட்டு விற்கப்படுகிறது. பனை மரத்தில் இருந்து கிடைக்கும் பொருட்கள் கிடைப்பது அரிது. அதுவும் "நுங்கு' அதிசயப் பொருளாக காணப்படுகிறது. இவை வெளி இடங்களில் இருந்து அவ்வப்போது கொண்டு வரப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வந்தது. சமீப காலமாக வரத்து இல்லை. தற்போது, பாலக்காடு அருகே வாழையாறு பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இவற்றை சுற்றுலாப் பயணிகள் உட்பட அனைவரும், விரும்பி வாங்கிச் செல்வதால், கிராக்கி ஏற்பட்டுள்ளது. வெட்டி எடுக்கப்பட்ட, ஒரு கண் நுங்கு ரூ.5க்கு விற்கப்படுகிறது.

## சொட்டு நீர் பாசனம் விண்ணப்பித்தால் மானியம்

**தேனி**: தமிழகத்தில் நிலவும் வறட்சியை சமாளிக்க, சொட்டு நீர் பாசனம் மட்டுமே நிரந்தர தீர்வாக உள்ளதால், விண்ணப்பிக்கும் விவசாயிகள் அனைவருக்கும் மானியம் வழங்க, அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் மூன்றாண்டுகளாக, பருவமழை சரியாக பெய்யவில்லை. மானாவாரி விவசாயம், குளத்துப்பாசனம், ஆற்றுப்பாசனம் முழுமையாக பொய்த்துப்போனது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, விவசாயம் முற்றிலும் கேள்விக்குறியாகி வருகிறது. இந்நிலையில், இருக்கும் நீரைக்கொண்டு அதிக பரப்பளவில் விவசாயம் செய்ய, அரசு சொட்டு நீர் பாசனத்தை ஊக்கப்படுத்தி வருகிறது. இதற்காக, எத்தனை பேர் மானியம் கேட்டாலும், வழங்க வேண்டும். எக்காரணத்தாலும், அவர்களின் விண்ணப்பத்தை

நிராகரிக்க கூடாது, என தோட்டக்கலைத்துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை, விவசாயத்துறை, விவசாய பொறியியல் துறைகள் மூலம் சொட்டு நீர் பாசன மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு, தேவைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு, வழங்கப்படுகிறது. சொட்டுநீர் பாசனம் அமைக்க முன்வரும் விவசாயிகளை ஊக்கப்படுத்தி, மானியம் வழங்கி அமைத்துக் கொடுக்க வேண்டும், தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.நூறு சதவீதம் மானியம் என அறிவித்திருந்தாலும், ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் ஏக்கருக்கு 24 ஆயிரத்து 63 ரூபாய் வீதம், 5 ஏக்கருக்கு 100 சதவீதம் மானியம் வழங்கப்படும். அதற்கு மேல் நிதி தேவைப்படும் விவசாயிகள், ஏற்கனவே மானியம் பெற்றிருந்தாலும், அடுத்தும் 75 சதவீத மானிய உதவியை பெறலாம். இதனால், சொட்டுநீர் பாசனம் அமைக்க முன்வரும் விவசாயிகளை தேடிப்பிடித்து, மானியம் வழங்கும் பணியில் விவசாய, தோட்டக்கலைத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**


**மேட்டூர் அணை நீர்மட்டம் 49 அடி**



**மேட்டூர் :** மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக அதிக அளவில் நீர் திறக்கப்படுவதால் அணையின் நீர் மட்டம் சரிந்து வருகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 49.35 அடியாக இருந்தது.குடிநீர் தேவைக்காக அணையில் இருந்து விநாடிக்கு 2 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்படுகிறது. மேட்டூர் அணைக்கு விநாடிக்கு 737 கனஅடி நீர் வந்து

கொண்டிருந்தது. நீர் இருப்பு 17.40 டிஎம்சி. மேட்டூர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது.

**தர்மபுரி மாவட்டத்தில் பருவநிலை மாற்றத்தால் பூத்துக்குலுங்கும் மாம்பூக்கள்**



**தர்மபுரி** : தர்மபுரி மாவட்டத்தில் மாமரங்களில் பூத்து குலுங்கும் 'மா' பூக்களால் நடப்பாண்டில் மாங்காய் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளதாக தோட்டக்கலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு இரண்டரை ஏக்கருக்கு 4 டன் முதல் 5 டன் வரை மா மகசூல் கிடைத்தது. மொத்தம் 40 ஆயிரம் டன் என்ற அளவிற்கு மகசூல் கிடைத்தது. இந்த ஆண்டு, அதை விட கூடுதலாக மகசூல் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது என தோட்டக் கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தர்மபுரி மாவட்டத்தில் மாந்தோப்புங்களில் அதிகமாக மாம்பூக்கள் பூத்துள்ளது. காலையில் குளிர்ந்த காற்றும், பகலில் வெப்ப காற்றும் வீசுவதாலும், பருவநிலை மாற்றத்தாலும், அதிகளவில் மா பூ பூத்துள்ளது. சமீபத்தில் பெய்த கோடைமழையால் மா பூ பூத்த இடங்களில் காய்பிடித்துள்ளது.

இதுகுறித்து தர்மபுரி மாவட்ட தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: 'மா'வில் பூ பூக்கும் தருணத்தில் சாம்பல்நோய், தத்துப்பூச்சி, அசுவினி, மாவுப்பூச்சி தாக்குதல் இருக்கும். அதுபோன்று, பூங்கொத்துப் புழு தாக்குதல், செதிள் பூச்சி தாக்குதல், கரும்பூசாண நோய் தாக்குதல் பரவலாக இருக்கும்.

விவசாயிகள் விழிப்புடன் இருந்து பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த வேண்டும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**முட்டை விலை 345 காசுகளாக உயர்வு**



**நாமக்கல் :** நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடந்தது.

பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு முட்டை விற்பனை நிலவரம் பற்றி ஆலோசித்தனர்.

கூட்டத்தில் முட்டை விலையில் 15 காசு உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து ஒரு முட்டையின் விலை 345 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.முட்டையின் நுகர்வு தமிழகம் மற்றும் கேரளாவில் அதிகரித்து வருகிறது.

இதனால் நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளது. இந்த வாரத்தில் மட்டும் 25 காசுகள் வரை உயர்ந்துள்ளது.

ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.50 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.67 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (பைசாவில்) பெங்களூரு- 360, மைசூர்- 357, ஐதராபாத்- 337, மும்பை- 377, விஜயவாடா- 337, கொல்கத்தா- 392, பர்வாலா- 360, டெல்லி- 370 காசுகள்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஒரு டன் கரும்புக்கு ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**



**காஞ்சீபுரம்,**

காஞ்சீபுரத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் ஒரு டன் கரும்புக்கு ரூ.3ஆயிரம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

விவசாயிகள் குறைதீர் கூட்டம்

காஞ்சீபுரம் மாவட்ட விவசாயிகள் குறைத்தீர் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் அருள்ஜோதிஅரசன் தலைமை தாங்கினார். வேளாண்மைத் துறை உதவி இயக்குனர் சவுந்தரராஜன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை துறை) பொன். சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கடந்த 13 –ந் தேதி முதல் 16–ந் தேதி வரை மகாராஷ்டிரா மாநிலத்தில் நடைபெற்ற விவசாய வேளாண்மை கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியில் கலந்துக்கொள்வதற்காக காஞ்சீபுரம் மாவட்டத்தில் இருந்து அழைத்து செல்லப்பட்ட விவசாயிகளுக்கு ரெயில்களில் முறையாக முன்பதிவு செய்து படுக்கை வசதி செய்து தரப்படவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டி கூச்சல் எழுப்பினர்.

ரூ.3 ஆயிரம் வழங்க கோரிக்கை

இதற்கு உதவி இயக்குனர் சவுந்தரராஜன் விவசாயிகளை அழைத்து சென்றது மட்டும்தான் எங்கள் வேலை மற்ற அனைத்து ஏற்பாடுகளையும் மாநில நிர்வாகத்தினர் செய்திருந்தனர் என தெரிவித்தார். கடந்த ஆண்டு வேளாண்மை

துறை சார்பாக மாவட்டம் முழுவதும் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி தருவதாக கூறி பின்பு தரப்படவில்லை. இந்த ஆண்டாவது வறட்சி நிவாரண நிதி வழங்க ஏற்பாடு செய்யுமாறும், ஒரு டன் கரும்புக்கு தற்போது ரூ.2500 வழங்கப்படுகிறது. அதை ரூ.3 ஆயிரமாக உயர்த்தி தரவேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

**வேலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கலெக்டர் தொடங்கி வைத்தார்**



**வேலூர்,**

வேலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி போடும் முகாமை நேற்று கலெக்டர் நந்தகோபால் அரியூரில் தொடங்கி வைத்தார்.

**கோமாரி நோய்**

கோமாரி நோய் கால்நடைகளுக்கு பரவும் ஒரு நச்சுயிர் நோய். இது வைரஸ் மூலம் கால்நடைகளுக்கு பரவி அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது. தண்ணீர், காற்று மற்றும் கால்நடைகள் ஒன்றோடொன்று நெருங்கி பழகுவதாலும் கோமாரி நோய் பரவுகிறது. கோமாரி நோயினால் தாக்கப்பட்ட கால்நடைகளுக்கு ஆரம்பத்தில் காய்ச்சல் இருக்கும். வாயில் இருந்து சளி போன்ற நுரையுடன் கெட்டியான உமிழ்நீர், கம்பி போன்று தொங்கிக் கொண்டிருக்கும். நோயினால் பாதிக்கப்பட்ட மாடுகள் தொடர்ந்து சப்புக் கொட்டியபடியிருக்கும். வாயின் உட்பகுதி, நாக்கின் மேல்புறம், கால்களின் குளம்புகளிடையே உள்ள தோலிலும், மடி மற்றும் காம்புகளில் நீர் கோர்த்த கொப்புளங்கள் மற்றும் புண்கள் ஏற்பட்டு தீவனம் உட்கொள்ள முடியாமல் நொண்டிக் கொண்டிருக்கும். குளம்புகள் தானாக கழன்று விழ நேரிடலாம். இதுபோன்ற பல்வேறு பாதிப்புகள் கால்நடைகளுக்கு ஏற்படும்.

**தடுப்பூசி முகாம்** கோமாரி நோயினை கட்டுப்படுத்த மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மேலும் கிராமங்களில் முகாம்

அமைத்து கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போட்டுவருகின்றனர். இந்த நிலையில் கிராமங்களில் உள்ள கால்நடை மருந்தகத்தில் 6–வது சுற்று தடுப்பூசி முகாம் வேலூர் மாவட்டத்தில் நேற்று தொடங்கியது. இந்த முகாம் வருகிற 21–ந் தேதி வரை நடக்கிறது. வேலூர் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் அரியூர் மலைக்கொடி கிராமத்தில் கால்நடைகளுக்கு தடுப்பசி போடும் சிறப்பு முகாம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த முகாமில் மாவட்ட கலெக்டர் நந்தகோபால் கலந்து கொண்டு மாடுகளுக்கு தடுப்பூசி போட்டு முகாமை தொடங்கி வைத்தார்.

<u>பால் உற்பத்தி குறையாது</u>

பின்னர் அவர் கூறுகையில் '4 மாதங்கள் முடிந்த இளங்கன்றுகளுக்கும், சினையாகவுள்ள பசுக்கள் மற்றும் எருமைகளுக்கும் தடுப்பூசி போடுவது அவசியமாகும். இந்த தடுப்பூசி போடுவதால் பால் உற்பத்தி குறையாது. கால்நடை வளர்ப்பு தொழிலில் ஈடுபடுவோர், விவசாயிகள், பண்ணையாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் இந்த தடுப்பூசியினை போட்டு கால்நடைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்' என்றார்.நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் கமலநாதன், உதவி இயக்குனர் மனோகரன், கால்நடை உதவி மருத்துவர் ராஜவேலு, மாநகராட்சி கவுன்சிலர் ஏ.ஜி.பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மும்பையில் சில்லறை மார்க்கெட்டுகளில் காய்கறி விலை கிடு, கிடு உயர்வு**



**மும்பை,**

மும்பையில் சில்லறை மார்க்கெட்டுகளில் காய்கறி விலை கிடு, கிடுவென உயர்ந்துள்ளது.

<u>காய்கறி விலை</u>

மும்பையில் கடந்த மாதத்தை காட்டிலும் இந்த மாத தொடக்கத்தில் காய்கறி விலை கிடு, கிடுவென உயர்ந்து உள்ளது. மொத்த மார்க்கெட்டில் சிறிய அளவு மட்டுமே

விலை உயர்ந்த போதிலும் சில்லறை மார்க்கெட்டில் 35 சதவீதம் வரை விலை உயர்வு ஏற்பட்டு உள்ளது. அதன்படி கடந்த மாதம் ரூ.12–லிருந்து ரூ.15 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ தக்காளி ரூ.20–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிலோ ரூ.35–க்கு விற்பனை செய்யப்பட்ட வெண்டைக்காய் தற்போது ரூ.48–க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்ட 1 கிலோ கத்தரிக்காய் தற்போது ரூ.10 அதிகரித்து ரூ.30–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

விலை உயர்வு

கிலோ ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்ட பச்சை பட்டாணி தற்போது ரூ.30 முதல் ரூ.38 வரை விற்பனை செய்யப்படுகிறது. ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்பட்ட முட்டைகோஸ் தற்போது ரூ.15 அதிகரித்து ரூ.30–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதேபோல் கிலோ ரூ.15 முதல் ரூ.18 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த மும்பைவாசிகளின் விருப்ப காய்கறியான உருளைகிழங்கு ரூ.30–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கிலோவிற்கு ரூ.10 முதல் 12 வரை விற்பனை செய்யப்பட்ட வெங்காயம் ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. திடீர் என ஏற்பட்டு உள்ள விலை உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து வியாபாரிகளிடம் கேட்டபோது, பருவ நிலைய மாற்றங்களால் காற்கறிகளின் வரத்து குறைந்து உள்ளதால் விலை உயர்வு ஏற்பட்டு உள்ளதாக கூறினர்.

**கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயிர்க்கடன் வழங்க ரூ.5 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு**



சேசம்பட்டியான்கொட்டாம் கிராமத்தில் புதிய ரேஷன் கடையை அமைச்சர் பி.பழனியப்பன் திறந்து வைத்து அத்தியாவசிய பொருட்களை வழங்கிய போது எடுத்த படம். அருகில் கே.பி.அன்பழகன் எம்.எல்.ஏ. மற்றும் பலர் உள்ளனர்.

**தர்மபுரி,**

தமிழகத்தில், இந்த ஆண்டு கூட்டுறவு சங்கங் கள் மூலம் பயிர்க்கடன் வழங்க ரூ.5 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று ரேஷன் கடை திறப்பு விழாவில் அமைச் சர் பி.பழனியப்பன் தெரி வித்தார்.

ரேஷன் கடைகள் திறப்பு

தர்மபுரி மாவட்டம் பாப் பிரெட்டிப்பட்டி ஒன்றியம் நடூர் மற்றும் நல்லம்பள்ளி ஒன்றியம் சேசம்பட்டியான் கொட்டாய் ஆகிய 2 கிராமங் களில் புதிய பகுதிநேர ரேஷன் கடைகள் திறப்பு விழா நடைபெற்றது. விழாக்களில் உயர்கல்வித்துறை அமைச்சர் பி.பழனியப்பன் கலந்து கொண்டு புதிய ரேஷன் கடை களை திறந்து வைத்து பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களின் விற்பனையை தொடங்கி வைத்தார். இதே போன்று மொரப்பூர் ஒன்றியம் ஒசஅள்ளி ஊராட்சி புதுப் பட்டிகாலனியில் கீழ் ரூ.17 லட்சத்து 20ஆயிரம் மதிப்பி லான சமுதாயக்கூ டம் கட்டும் பணியையும் அவர் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சிகளில் அமைச்சர் பி.பழனியப்பன் பேசியதாவது:-

தமிழக முதல்-அமைச்சர் விலையில்லா அரிசி, படித்த ஏழைப் பெண்களுக்கு திரு மண நிதியுதவியுடன் தாலிக் குத் தங்கம், கறவைப்பசுக் கள், வெள்ளாடுகள், மாணவ- மாணவிகளுக்கு மடிக்கணினி, இல்லத்தரசிகளுக்கு விலை யில்லா மின்சாதன பொருட் கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும் சிறப்புடன் நிறைவேற்றி வருகிறார்ள். மக்களின் கோரிக்கையை அறிந்து அதனை நிறைவேற்றும் விதமாக திட்டங்களை செயல் படுத்தி வருகிறார். அந்த அடிப்படை யில் நடூர் மற்றும் சேசம்பட்டி யான்கொட்டாய் கிராமமக்களின் நீண்டநாள் கோரிக் கையை நிறைவேற்றும் வித மாக புதிய பகுதிநேர ரேஷன் கடைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வட்டி தள்ளுபடி

இதேப்போல சமுதாயக் கூடங்கள் வேண்டுமென்ற மக் களின் கோரிக்கையின் அடிப் படையில் மக்கள் பங்களிப் புடன் கூடிய சிறப்பு தன் னிறைவுத்திட்டத்தின் ஒச அள்ளி ஊராட்சி புதுப் பட்டி காலனி உள்பட 6 இடங்களில் சமுதாயக்கூடங்கள் கட்டும் பணி தொடங்கி வைக்கப்பட் டுள்ளது.

புதிதாக ஏற்படுத்தப் பட்ட பகுதிநேர ரேஷன் கடைகளுக்கு விரைவில் கட் டிடங்கள் கட்டித்தரப் படும். கூட்டுறவு கடன் சங்கங் களில் வாங்கிய பயிர்க்கடனை உரிய தவணையில் செலுத்துபவர் களுக்கு முழுவட்டியும் தள்ளு படி செய்யப்படுகிறது.

இந்த பயிர்க்கடனுக்காக தமி ழக முதல்-அமைச்சர் இந்த ஆண்டில் ரூ.5 ஆயிரம் கோடி யும், இந்த வட்டி தள்ளுபடிக் காக ரூ.200 கோடியும் நிதி வழங்கியுள்ளர்.

இவ்வாறு அமைச்சர் பி.பழனியப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சிகளில் கே.பி.அன்பழகன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் டி.ஆர்.அன்பழகன், மாவட்ட வருவாய் அலுவலர் ராமர், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ரேணுகா, உதவி கலெக்டர் சந்திரசேகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் ஜாபர்அலி, ஒன்றியக்குழுத் தலைவர்கள் முனுசாமி, முரு கன், துணைத்தலைவர் சாரதி செந்தில்குமார், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங் கத் தலைவர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**காவிரி பாலாறு இணைப்பு திட்டத்தை அமல்படுத்த வேண்டும் விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**



சந்தூர் அருகே பெருமாள் நகரில் தமிழக விவசாயிகள் சங்க புதிய கிளை தொடங்கப்பட்ட போது எடுத்த படம்.

**கிருஷ்ணகிரி, -**

காவிரி-பாலாறு இணைப்பு திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

<u>புதிய கிளை தொடக்கம்</u>

கிருஷ்ணகிரி மாவட்டம் சந்தூர் அருகே உள்ள பெருமாள் நகரில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் கிளை தொடக்க விழா நடந்தது. ஒன்றிய செயலாளர் கண்ணன் தலைமை தாங்கினார். நர்சரி உரிமையாளர் சங்க தலைவர் கண்ணையன் மற்றும் கிளைச் சங்க நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். கிளைத்தலைவர் ஜலபதி வரவேற்றார்.

சங்க மாநில பொதுச் செயலாளர் ராமகவுண்டனர் புதிய கிளையை திறந்து வைத்து, சங்க கொடியேற்றி பேசினார். கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் அசோக்குமார், ராஜா, பெருமாள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

<u>ஆறுகள் இணைப்பு திட்டம்</u>

மாநில தோட்டக்கலைத் துறை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கும் செடிகளை சந்தூர் பகுதியில் உள்ள அனைத்து நாற்று பண்ணையாளர்களிடமும் கொள்முதல் செய்ய வேண்டும். மா டன் ஒன்றுக்கு ரூ. 20 ஆயிரம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

காய்ந்து போன மரம் ஒன்றுக்கு ரூ. 5 ஆயிரமும், இறந்த கால்நடைகளுக்கு ரூ. 25 ஆயிரமும் தமிழக அரசு உடனடியாக வழங்கிட வேண்டும். காவிரி - பாலாறு இணைப்பு திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

**ஊஞ்சலூர் அருகே தென்னை விவசாயிகளுக்கு பயிற்சி மரம் ஏறும் உபகரணம் இலவசமாக வழங்கப்பட்டது**



**<u>ஊஞ்சலூர்</u>**

ஊஞ்சலூர் அருகே உள்ள கொம்பனை புதூர், கொளத்துபாளையம் பகுதியில் மத்திய அரசின் தென்னை நல வாரியம் சார்பில் தென்னை விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமில் தென்னை சாகுபடி செய்யும் முறை குறித்தும், தென்னை மரம் ஏறும் உபகரணம் பயன் படுத்தி எவ்வாறு மரம் ஏறுவது என்பது குறித்தம் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

முகாமில், 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு ரூ.2 ஆயிரம் மதிப்பிலான தென்னை மரம் ஏறும் உபகரணம் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ரூ.1 லட்சம் இன்சூரன்சு செய்து சான்றுகளும் வழங்கப்பட்டன.

**கோபி அருகே கோமாரிநோய் தாக்குதலை தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி**



**கோபிசெட்டிபாளையம்,**

கோபி அருகே கோமாரிநோய் தாக்குதலை தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

<u>கோமாரிநோய்</u>

ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஆண்டு கால்நடைகளுக்கு கோமாரிநோய் தாக்கியது. இதனால் கால்நடைகள் நோய் தாக்கி பலியாகின. அப்போது கால்நடைகளுக்கு கோமாரிநோய் தாக்குதலை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. அதன்படி கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் குழுக்கள் அமைத்து ஒவ்வொரு கிராமமாக சென்று கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், வெளிமாநிலங்களில் இருந்து கால்நடைகளை கொண்டு வருவதற்கு தடை விதிக்கப்பட்டது. இதேபோல் கால்நடை சந்தைகள் நடத்துவதற்கும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது. பல்வேறு நடவடிக்கைகளுக்கு பின்னர் ஈரோடு மாவட்டத்தில் கோமாரிநோய் தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது.

<u>தடுப்பூசி</u>

இந்தநிலையில் இந்தஆண்டு கால்நடைகளுக்கு கோமாரிநோய் தாக்குதலை தடுக்கும் வகையில் தமிழக அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி ஈரோடு மாவட்டத்தில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கோபி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் ஒவ்வொரு கிராமமாக கால்நடைத்துறை டாக்டர்கள் சென்று கால்நடைகளுக்கு தடுப்பூசிகளை போட்டு வருகிறார்கள். கோபிசெட்டிபாளையம் அருகே கடுக்காம்பாளையம், வெள்ளாங்கோவில், அய்யம்புதூர், நாகதேவம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று கோமாரிநோய் தடுப்பூசி போடும் முகாம் நடைபெற்றது. இதில் விவசாயிகள் தங்களது கால்நடைகளை கொண்டுவந்து தடுப்பூசிகளை போட்டுக்கொண்டனர். இதில் கன்றுக்குட்டி முதல் அனைத்து வயதுடைய மாட்டுக்கும் தடுப்பூசி போடப்பட்டது.

<u>12 ஆயிரம் மாடுகள்</u>

இதுகுறித்து கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

ஈரோடு மாவட்டத்தில் 3 லட்சத்து 70 ஆயிரம் மாடுகள் உள்ளன. இதில் கோபி கோட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் சுமார் 2 லட்சத்து 54 ஆயிரம் மாடுகள் உள்ளன. இந்த மாடுகளுக்கு கோமாரிநோய் தாக்குதலை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. சத்தியமங்கம், கோபிசெட்டிபாளையம், பவானி, அந்தியூர் ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடுவதற்காக 45 மருத்துவ குழுவினர் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழுவினர் ஒவ்வொரு கிராமமாக சென்று கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவார்கள். கடந்த 2 நாட்களில் மட்டும் சுமார் 12 ஆயிரம் மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு உள்ளது. இவ்வாறு கால்நடைகளை காப்பாற்ற தடுப்பூசி முகாம் அமைக்கப்படும்போது விவசாயிகள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

விழிப்புணர்வு

முகாம்களில் விவசாயிகள் தங்களது கால்நடைகளை கொண்டு வந்து தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். கோமாரிநோய் தாக்குவது போன்று அறிகுறி தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள கால்நடை ஆஸ்பத்திரிக்கு கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும். விவசாயிகளின் தவறான அணுகுமுறையால்தான் கால்நடைகள் இறந்துவிடுகின்றன. எனவே விவசாயிகள் விழிப்புணர்வு செயல்படவேண்டும். இறந்த கால்நடைகளை வாய்க்கால் போன்ற நீர்நிலைகள் வீசக்கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

## மல்பரி சாகுபடி பரப்பளவு 400 ஏக்கர் அதிகரிப்பு பட்டுக்கூடுகளுக்கு நிலையான விலை, விவசாயிகள் ஆர்வம்



**கோவை,**

கோவை மாவட்டத்தில் மல்பரி சாகுபடி பரப்பளவு 400 ஏக்கர் அதிகரித்துள்ளது. பட்டுக்கூடுக்கு நிலையான விலை கிடைப்பதால் விவசாயிகள் பட்டுவளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**மல்பரி சாகுபடி**

மல்பரி செடிகளில் பறிக்கப்படும் இலைகளை உணவாக கொண்டு வளரும் பட்டுப்புழுக்கள் பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்கின்றன. இந்த வகையில் கோவை மாவட்டத்தில் கடந்த ஆண்டில் மல்பரி சாகுபடி 500 ஏக்கர் பரப்பளவில் இருந்தது. தற்போதைய சாகுபடி 900 ஏக்கர் பரப்பளவாக அதிகரித்துள்ளது.

இதன் மூலம் பட்டுக்கூடு உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. தினசரி கோவை விற்பனை மையத்துக்கு 2 டன் வரை பட்டுக்கூடுகளை விவசாயிகள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். பட்டுக்கூடுக்கு நிலையான விலை கிடைக்கிறது. தொடர்ந்து கிலோவுக்கு ரூ.400 வரை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து மேலும் கோவை பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குனர் எஸ். பிரின்ஸ் மோகன் கூறியதாவது:–

**400 ஏக்கர் அதிகரிப்பு**

கோவை மாவட்டத்தில் மல்பரி சாகுபடி பரப்பளவு 400 ஏக்கர் அதிகரித்துள்ளது. இதன் மூலம் பட்டுக்கூடுகள் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. பட்டு விவசாயிகளுக்கு தற்போது மல்பரி நடவு ஊக்கத்தொகை ரூ.6,750–ல் இருந்து ரூ.10,500 ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. சொட்டுநீர் பாசனத்துக்கு மானியம் ரூ.20 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரமாக வழங்கப்படுகிறது.

இதில் சிறு, குறு பட்டு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம் அளிக்கப்படுகிறது. புழு வளர்ப்பு மனைகளுக்கு ரூ.63 ஆயிரத்தில் இருந்து ரூ.87,500 மானியமாக வழங்கப்படுகிறது. இது தவிர மேம்படுத்தப்பட்ட தளவாடங்கள் வாங்குவதற்கு மானியம் ரூ.52,500 வழங்கப்படுகிறது.

**வருமானம்**

மற்றும் பட்டுபயிற்சி நிலையம் மூலம் விவசாயிகளுக்கு திறன்வளர்ப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இதற்கான உதவித்தொகை ரூ.2 ஆயிரத்தில் இருந்து ரூ.5 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் மஞ்சள் பட்டுக்கூடுகளை விட வெண் பட்டுக்கூடுகள் உற்பத்தியே அதிகமாக உள்ளது. இதன் மூலம் நல்ல வருமானம் கிடைக்கிறது. 1 ஏக்கர் மல்பரி சாகுபடி செய்து, அதன் மூலம் பட்டுவளர்க்கும் விவசாயி ஒருவர் ஆண்டுக்கு ரூ.1½ லட்சம் முதல் ரூ.2 லட்சம் வரை வருமானம் பெற முடியும்.

**நாற்றுகள் உற்பத்தி**

பட்டு வளர்ப்புக்கு தேவையான மல்பரி சாகுபடிக்கு 1 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயி ரூ.50 ஆயிரம் வருமானம் பெறலாம். கோவை மாவட்டத்தில் 5 இடங்களில் இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் உள்ளன. இங்கிருந்து விவசாயிகள் பட்டுப்புழுக்களை வாங்கிச்சென்று பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்கின்றனர்.

இது தவிர பட்டு விவசாயிகள் மல்பரி நாற்றங்கால் மூலம் நாற்றுகள் உற்பத்தி செய்து 1 ஏக்கரில் 100 நாட்களில் ரூ.1 லட்சம் வரை லாபம் பெறலாம். இதற்கான பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

**மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 283 பயனாளிகளுக்கு கடன் உதவி**



**கோவை,**

கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் பயனாளிகளுக்கு கடன் உதவி வழங்கும் விழா வங்கி வளாகத்தில் நடந்தது. விழாவுக்கு வங்கி தலைவர் ஆர்.ஏ.சக்திவேல் தலைமை தாங்கினார். வங்கி மேலாண்மை இயக்குனர் சு.ராமகிருஷ்ணன் வரவேற்றார். விழாவில் அமைச்சர் தாமோதரன் கலந்து கொண்டு, மாற்றுத்திறனாளிகள், சுய உதவிக்குழுக்கள் உள்பட 283 பயனாளிகளுக்கு ரூ.497.94 லட்சம் கடன் உதவிகளை வழங்கினார்.

முடிவில் வங்கி பொதுமேலாளர் கே.பாலகிருஷ்ணன் நன்றி கூறினார். விழாவில் எம்.எல்.ஏக்கள் எஸ்.பி.வேலுமணி, சேலஞ்சர்துரை, வங்கி தலைவர் ஆர்.ஏ.சக்திவேல் வங்கி நிர்வாக குழு உறுப்பினர்கள், பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**தஞ்சை மாவட்டத்தில் மாடுகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி**



**தஞ்சாவூர்,**

தஞ்சை மாவட்டத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியை மாவட்ட ஊராட்சிக்குழு தலைவி அமுதாரவிச்சந்திரன் தொடங்கி வைத்தார்.

**கோமாரி நோய் தடுப்பூசி**

தமிழக அரசின் ஆணைக்கிணங்க மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி 6-வது கட்டமாக தொடங்கியது. இந்த தடுப்பூசி போடும் பணி வருகிற 21-ந்தேதி வரை நடைபெறுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள 3 லட்சத்து 86 ஆயிரம் மாடுகளுக்கு இந்த கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெறுகிறது. இதில் கால்நடை டாக்டர்கள், கால்நடை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் என 147 பேர் இந்த பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**தொடக்க விழா**

தஞ்சையை அடுத்த நீலகிரி ஊராட்சியில் கோமாரிநோய் தடுப்பூசி போடும் பணி தொடக்க விழா நடந்தது. விழாவிற்கு கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் செல்வவிநாயகம் தலைமை தாங்கினார். உதவி இயக்குனர்கள் நெடுஞ்செழியன், ராஜகோபால், இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நீலகிரி ஊராட்சி மன்ற துணைத்தலைவர் அருள்சகாயகுமார் வரவேற்றார்.

முகாமை தஞ்சை மாவட்ட ஊராட்சிக்குழு தலைவி அமுதாரவிச்சந்திரன் தொடங்கி வைத்தார். இதில் கால்நடை மருத்துவர்கள் செரீப், தாரணி, கால்நடை ஆய்வாளர்கள் ஹரி மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முகாமில் 300 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. முடிவில் ஊராட்சி மன்ற உறுப்பினர் ராஜா நன்றி கூறினார்.

**தஞ்சை அருகே கால்நடை துறை உதவி இயக்குனர் ஆய்வு**



**தஞ்சாவூர்,**

தஞ்சையை அடுத்த செங்கிப்பட்டி கால்நடை மருந்தகத்திற்குட்பட்ட வன்னியம்பட்டி, சானிடோரியம் பகுதியில் 6–வது கட்டமாக கோமாரிநோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற்றது. இந்த பணிகளை தஞ்சை மண்டல கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் ராஜகோபால் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் துண்டு பிரசுரங்களையும் வழங்கினார். அப்போது செங்கிப்பட்டி கால்நடை மருத்துவர் பழனிச்சாமி, கால்நடை ஆய்வாளர் கமலா ஆகியோர் உடன் இருந்தனர்.

**கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் உலர் தீவன மையம் கலெக்டர் திறந்து வைத்தார்**



**நாகப்பட்டினம், -**

கீழ்வேளூர் கால்நடை மருந்தகத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் உலர் தீவன மையத்தை கலெக்டர் முனுசாமி திறந்து வைத்தார்.

<u>தொடக்க விழா</u>

கீழ்வேளூர் கால்நடை மருந்தகத்தில் தமிழக முதல்-அமைச்சரின் ஆணைக்கினங்க கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் உலர் தீவன மையம் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவுக்கு நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி தலைமை தாங்கி உலர் தீவன மையத்தை திறந்து வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

நாகை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை கட்டுப்பாட்டில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு அலுவலகம், புதியதாக கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திக்காக துணை இயக்குனர் அலுவலகம், 2 கால்நடை பெரிய மருத்துவமனைகள், 3 கால்நடை மருத்துவமனைகள், 64 கால்நடை மருந்தகங்கள், 2 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், 18 கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கால்நடைகளுக்கு தேவையான உலர் தீவனத்தை விவசாயிகளுக்கு வழங்க 250 மானிய உலர் தீவன விற்பனை நிலையங்களை அமைக்க முதல்-அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில் நாகை மாவட்டத்தில் கீழ்வேளூர், வேதாரண்யம், சீர்காழி ஆகிய 3 இடங்களில் உள்ள கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை மருத்துவமனைகளில் உலர் தீவனமையங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

<u>உலர் தீவனம்</u>

இந்த மையங்களில் உலர் தீவனம் கிலோ ரூ.2 வீதம் ஒரு மாட்டுக்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம் 7 நாட்களுக்கு 21 கிலோ வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற கால்நடை பராமரிப்புத் துறையால் வழங்கப்படும் புகைப்படத்துடன் கூடிய தீவன அட்டை வைத்திருக்க வேண்டும். அதிகபட்சம் ஒரு அட்டை தாரருக்கு 5 மாடுகளுக்கு உலர் தீவனம் வழங்கப்படும்.

பயனாளிகளுக்கு வழங்கப்படும் உலர் தீவனத்துக்கு உரிய ரசீதுகள் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் ராஜசேகரன், துணை இயக்குனர் ரவிச்சந்திரன், உதவி இயக்குனர் ரமேஷ், கீழ்வேளூர் ஒன்றியக்குழுத் தலைவர் முருகானந்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பண்ருட்டி பகுதியில் பலாப்பழ சீசன் தொடங்கியது வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் பணி தீவிரம்**



**பண்ருட்டி,**

பண்ருட்டியில் பலாப்பழ சீசன் தொடங்கியதை அடுத்து, அவற்றை வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் பணியானது தீவிரமாக நடைபெற்று வருகிறது.

பலாப்பழ சீசன்

கடலூர் மாவட்டம், பண்ருட்டி பகுதிகளான காடாம்புலியூர், மேல்மாம்பட்டு, முத்தாண்டிக்குப்பம், கீழக்குப்பம், காட்டுகூடலூர், சாத்திப்பட்டு உள்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் சுமார் 7 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் பலா பயிர் செய்துள்ளனர். அதன் மூலம் அவர்கள் ஆண்டு தோறும் நல்ல வருமானமும் பெற்று வந்தனர். இந்நிலையில் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட தானே புயலில் சுமார் 30 முதல் 60 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள பலா மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் அவர்கள் செய்வது அறியாது தவித்து வருகின்றனர்.

வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி

இதனிடையே நடப்பாண்டில் பண்ருட்டி பகுதியில் பலாப்பழ சீசன் தொடங்கியதை அடுத்து, அறுவடை பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதன் மூலம் நடப்பாண்டில் பலாப்பழங்கள் வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இது குறித்து பண்ருட்டியை சோந்த வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

ஏற்றுமதி குறைவு

தானே புயலால் பண்ருட்டி பகுதியில் பயிரிடப்பட்ட ஏராளமான பலா மரங்கள் பலத்த சேதம் அடைந்தன. அதன் பாதிப்பு இன்னும் மறையாமல் உள்ளதால்

பலாப்பழம் விளைச்சல் முழுமையடையவில்லை. தானே புயலுக்கு முன்பு பண்ருட்டியில் உள்ள பலாப்பழ குடோன்களில் இருந்து பிப்ரவரி மாதத்தில் மட்டும் நாள் ஒன்றுக்கு 6 ஆயிரம் முதல் 7 ஆயிரம் வரையிலான பலாப்பழங்கள் லாரி மூலம் தமிழகத்தின் பிற மாவட்டங்கள் மற்றும் ஆந்திரா, மும்பை, புதுச்சேரி உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. பலாப்பழ சீசனின் உச்சகட்டமான ஏப்ரல் மாத தொடக்கத்தில் அவை 14 ஆயிரம் வரையில் உயர்ந்தது. ஆனால் நடப்பாண்டில் அவை தற்போது 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் வரையிலான பழங்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. அதே நேரத்தில் ஏப்ரல் மாதத்தில் பலாப்பழ ஏற்றுமதி 10 ஆயிரமாக உயரும் என தெரிகிறது. இந்த ஏற்றுமதி குறைவிற்கு தானே புயலே காரணம் ஆகும்.

விலை

தானே புயலில் சாய்ந்த மரங்களுக்கு பதிலாக விவசாயிகள் புதியதாக நட்டுள்ள பலாப்பழ மரக்கன்று தற்போது நல்ல முறையில் வளர்ந்து வருகின்றது. அவை விளைச்சலை கொடுக்க இன்னும் குறைந்தது 4 ஆண்டுகள் ஆகும். அது வரையில் விவசாயிகளும், எங்களை போன்ற வியாபாரிகளும் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். பலாப்பழம் ஒன்றின் விலையானது அளவுக்கு ஏற்ப ரூ. 100–ல் இருந்து ரூ. 600 வரைக்கு விற்கப்படுகின்றது. மொத்த விற்பனை என்றால் ஆயிரம் பழங்கள் ரூ. 15 ஆயிரத்தில் இருந்து ரூ.20 ஆயிரம் வரைக்கு விற்கப்படுகின்றது.

இவ்வாறு அவர் கூறினார்.

**மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**



**ஸ்ரீரங்கம்,**

திருச்சி மாவட்டத்தில் உள்ள 14 பஞ்சாயத்து யூனியன்களிலும் 3 லட்சத்து 30

ஆயிரம் மாடுகள் உள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் தொடக்க விழா ஸ்ரீரங்கம் மேலூர் சாலையில் உள்ள மந்தையில் நடந்தது. கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் டாக்டர் சின்னதுரை தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்தார். வருகிற 21–ந் தேதி வரை தொடர்ந்து முகாம் நடைபெறுகிறது. துணை இயக்குனர் டாக்டர் மோகனரங்கன், திருச்சி உதவி இயக்குனர் டாக்டர் சுந்தரராஜ், லால்குடி உதவி இயக்குனர் டாக்டர் சுரேஷ்குமார், முசிறி உதவி இயக்குனர் டாக்டர் பழனிசாமி ஆகியோர் தலைமையில் 85 கால்நடை மருத்துவர்கள் கொண்ட மருத்துவ குழுவினர் அனைத்து பஞ்சாயத்துகளிலும் கால்நடைகளுக்கு கோமாரி நோய்களுக்கு தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**பெரம்பலூரில் விவசாயிகளின் பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்ய வலியுறுத்தல்**

பெரம்பலூரை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகள் சங்க மாவட்டக் குழுவில் வலியுறுத்தப் பட்டது.

<u>மாவட்டக்குழு கூட்டம்</u>

பெரம்பலூரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டக்குழுக்கூட்டம் அதன் தலைவர் ஏ.ராஜு தலைமையில் நடந்தது.

மாவட்ட செயலாளர் வி.ஜெயராமன் அறிக்கை வாசித்தார். மாவட்டக்குழு உறுப்பினர்கள் அ.வேணு கோபால், வி.ஞானசேரகன், சி.அழகுராஜ், முருகன், கலியன், அய்யப்பன், கோவிந் தன், ஜெயா, எஸ்.அமுதா, ஆகியோர் கலந்து கொண்ட னர்.

கூட்டத்தில் நிறை வேற்றப் பட்ட தீர்மானங்கள் வரு மாறு:-

பெரம்பலூர் மாவட்டத் தில் கடந்த 2 ஆண்டாக பருவ மழை பொய்த்து வேளாண்மை தொழில் வெகுவாக பாதிக்கப் பட்டுள்ளதால் பெரம்பலூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளுக்கு போதிய நிவாரண உதவிகள் வழங்கவேண்டும்.

பயிர்க்கடன்களை தள்ளு படி செய்திட வேண்டும்.

<u>ஆழப்படுத்த வேண்டும்</u>

பெரம்பலூர் மாவட்டத் தில் ஏரிப்பாசனத்தை நம்பி ஆயிரக்கணக்கான நிலங்களில் சாகுபடி நடைபெறுவதால், பெரம்பலூர் பெரிய ஏரி, வெள்ளந்தாங்கிஅம்மன் ஏரி, துறைமங்கலம் ஏரி, அரும்பா வூர், தொண்டமாந்துறை ஏரிகள் குன்னம் தாலுகா கிழு மத்தூர், அத்தியூர், வயலூர், கைப்பெரம்பலூர், ஒகளூர், வடக்கலூர், அகரம் சிகூர், எழுமூர், பெருமத்தூர் ஆகிய முக்கியமான ஏரிகள் உள்பட மாவட்டம்

முழுவதும் அனைத்து பாசன ஏரிகள் மற்றும் குளங்கள் உள்ளிட்ட நீர்¢நிலைகளை தூர்வாரரி சீரமைத்து அனைத்து நீர் வரத்து வாய்க்கால்களையும் ஆழப்படுத்தவேண்டும்.

பெரம்பலூர் மாவட்டத் தில் குன்னம், வேப்பந்தட்டை, ஆலத்தூர் ஆகிய தாலுகா தலைநகரங் களை கிராமங்களுடன் இணைக்கும் வகையில் டவுன் பஸ்கள் இயக்கவேண்டும்.

கூடுதல் பஸ்கள்

அரியலூரில் இருந்து பெரம்பலூருக்கு நொச்சிக் குளம், ஜமீன்பேரையூர், ஆலத்தூர்கேட் வழியாக அதிக பஸ்களும், பெரம்ப லூரில் இருந்து கள்ளப்பட்டிக்கு உடும்பியம் வழியாக கூடுதல் பஸ்களும் இயக்கவேண்டும்.

அகரம் சிகூரில் பஸ் நிலையம் அமைக்க வேண்டும். இந்த கோரிக்கை களை வலியு றுத்தி மே மாதத் தில் தாலுகா தலைமை இடங்களில் போராட்டம் நடத்துவது.

மேற்கண்ட தீர்மானங்கள் உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கோமாரி நோய் தடுப்பூசி போட்டு கால்நடைகளை பாதுகாக்க வேண்டும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

**கரூர்,**

வருகிற 21-ந்தேதி வரை நடைபெறும் இலவச மருத்துவ முகாமிற்கு கால்நடைகளை கொண்டு சென்று கோமாரி தடுப்பூசி போட்டு பயன்பெற விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இது குறித்து கரூர் மண்மங்கலம் பண்டுதகாரன் புதூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் அகிலா விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்ப தாவது :-

கோமாரி நோய்

கோமாரி நோய் மாடு, எருமை, ஆடு, பன்றிகள் ஆகிய கால்நடைகளை தாக்கி மிக அதிக அளவிலான பொரு ளாதார இழப்பை ஏற்படுத்தும் கொடிய தொற்று நோயாகும். இந்த நோயை கிராமப் புறங்களில் கால்கட்டு, வாய்சப்பை என அழைப்பர். கோமாரி நோய் ‘பிக்கோர்னா’ எனப்படும் மிகச்சிறிய வைரஸ் நச்சுயிரிகளால் ஏற்படுகிறது. அதிவிரையில் பரவக்கூடிய இந்த நச்சுயிரி பிளவு பட்ட குளம்புகள் கொண்ட கால் நடைகள் அனைத்தையும் தாக்கும். நோயுற்ற கால் நடைகளில் கடும் காய்ச்சல், வாய், நாக்கு, மடி, காம்பு, குளம்புகளுக்கு இடையே கொப்புளங்கள், புண்கள் ஆகியவைகள் காணப்படும். இந்நோயுற்ற கால் நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், பால், சாணம், உபயோகப் படுத்திய தண்ணீர்,

தீவனத் தொட்டிகள், தீவனம் ஆகியவைகள் காற்று மூலம் நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ இந்த வியாதி பரவுகின்றன. இந்த நோய் தாக்குதலால் கறவை மாடுகளில் பால் உற்பத்தியும், எருதுகளில் வேலைத் திறனும் குறையும். கறவை மாடுகள் சினைப்பிடிப்பது தடைபடும். இந்நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் பாலை குடிப்பதன் மூலம் இளம் கன்றுகளில் அதிக அளவில் இறப்பு நேரிடும். கடுமையான நோய் கிளர்ச்சியினால் 50 விழுக்காடு அளவுக்கு மாடுகள் இறக்க நேரிடும். நோய் பாதிக்கப்பட்டு குணமடைந்த கால்நடைகளின் பால் உற்பத்தி திறன் குறைந்து விடும். கடந்த வருடம் இந்த நோய் தாக்குதலினால் பல மாவட்டங்களில் கால் நடைகள் வெகுவாக பாதிக்கப் பட்டன.

தடுப்பூசி

தடுப்பூசி மட்டுமே கால் நடைகளை கோமாரி நோயில் இருந்து காப்பாற்றும். எனவே கால்நடைகளில் அதிக பொருளாளதார இழப்பை ஏற்படுத்தும் கோமாரி நோயை தடுக்க கரூர் மாவட்ட கால் நடை பராமரிப்புத்துறை சார் பில் அனைத்து கிராமங் களிலும் வருகிற 21-ந் தேதி வரை கால்நடைகளுக்கு இலவசமாக தடுப்பூசி போடப் படுகிறது.

எனவே பண்ணையாளர்கள் அனைவரும் தங்கள் அனைத்து கால்நடைகளை யும் தடுப்பூசி அளிக்கும் இடத்திற்கு கொண்டு சென்று , கோமாரி நோய் தடுப்பூசியை முன்னெச்சரிக்கையாக போட்டு கால்நடைகளை பாதுகாத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதனால் மாடுகளின் பாலின் அளவு குறைதலோ, அல்லது வேறு சிரமங்களோ ஏற்படாது. ஒரு சிலர் தடுப்பூசி அளிக்காமல் இருப்பதன் காரணமாக இந்த நோய் தாக்கம் ஏற்பட்டு மற்ற கால்நடைகளை பாதிக்கும் வாய்ப்பு இருப்பதால், கால்நடை பராமரிப்புத்துறை நடத்தும் இந்த இலவச தடுப்பூசி முகாமை விவசாய மக்கள் முழுமையான அளவில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

**நிலக்கோட்டையில் பலத்த மழை**



**நிலக்கோட்டை,**

திண்டுககல் மாவட்டத்தில், கடந்த 3 ஆண்டுகளாக மழை இல்லாமல் வறட்சியாக உள்ளது. இந்நிலையில் நேற்று நிலககோட்டை பகுதியில் நேற்று மாலை குளத்துபட்டி, சீத்தாபுரம், என்.ஊத்துப்பட்டி, அப்பாவுபிள்ளைபட்டி, சின்னமநாயககன்கோட்டை மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் திடீரென பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் பூமி குளிர்ந்தது. இந்த மழையால் நிலககோட்டை பகுதியில் உள்ள விவசாயிகள், பொது மககள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**வறட்சியால் தண்ணீர் தட்டுப்பாடு: கிணற்று பாசனம் மூலம் குறுகிய காலப்பயிர் சாகுபடி வேளாண்மை அதிகாரி அறிவுரை**



**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கிணறுகளில் உள்ள குறைந்த அளவு தண்ணீரை பயன்படுத்தி குறுகிய காலப்பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகளுக்கு வேளாண்மை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

<u>பருவ மழை</u>

தமிழகத்தில் பருவ மழை பொய்த்து போனதால் கடுமையான வறட்சி நிலவி வருகிறது. இதில் திண்டுக்கல் மாவட்டமும் தப்பவில்லை. பெரும்பாலான மக்கள் விவசாயத்தையும், கால்நடைகளையும் நம்பி உள்ளனர். இந்த நிலையில் பருவமழை கைவிட்டதால் கிணறுகள், குளங்கள், தண்ணீரின்றி வறண்டு உள்ளன. ஆயிரம் அடி ஆழ்துளை கிணறு அமைத்தாலும் தண்ணீர் இல்லாத நிலை உள்ளது. இந்த நிலையில் மழையின்றி தவிக்கும் மக்களுக்கு கருண பகவான் வழிவிடுவானா என்ற ஏக்கத்தில் மக்கள் உள்ளனர். விவசாயம் செய்ய முடியாத நிலையில் பொதுமக்கள் திண்டாடி வருகின்றனர். ஆறுகள், குளம் வறண்டு போனதால் நிலத்தடி நீர் அதல பாதாளத்திற்கு சென்றது. இதனால் விவசாயம் செய்ய முடியாத

நிலையில் மக்கள் உள்ளனர். எனவே திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயம் அழியும் நிலையில் உள்ளது. பருவமழை தொடர்ந்து ஏமாற்றி வருவதால் விவசாயிகள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து வருகின்றனர்.

**<u>மாற்றுப்பயிராக</u>**

திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் உள்ள கிணறுகளில் குறைவான தண்ணீர் இருக்கிறது. ஒரு சில கிணறுகளில் தண்ணீர் இருந்தாலும் அவற்றை வைத்து விவசாயம் செய்ய முடிவதில்லை. இதைத்தொடர்ந்து கிணறுகளில் உள்ள குறைவாக தண்ணீரை கொண்டு நெல், கரும்பு, மக்காச்சோளம், கம்பு உள்ளிட்ட நீண்டகால பயிர்களை சாகுபடி செய்ய முடிவதில்லை. இவற்றை பயிரிடுவதற்கு 4 மாதங்கள் மற்றும் அதற்கு மேல் ஆகும். அது வரையில் கிணற்றில் தண்ணீர் இருப்பது என்பது கேள்வி குறியே? எனவே விவசாயிகள் இதற்கு மாற்றுப்பயிராக குறுகிய காலப்பயிரான உளுந்து, பாசிப்பயறு உள்ளிட்ட குறுகிய கால பயிர் வகைகளை பயிரிடலாம். குறுகிய காலப்பயிர்களை பயிரிடுவதன் மூலம் 2 மாதங்களுக்குள் மகசூல் கிடைத்து விடும். மேலும் இவற்றை பயிரிடுவதற்கு குறைந்த அளவில் தண்ணீர் பாய்ச்சினாலே போதுமானது. இதனால் விவசாயிகள் கிணற்றில் இருக்கும் தண்ணீரைக் கொண்டு குறுகிய காலப்பயிரான பயிர் வகைகளை பயிரிட்டு பயனடையலாம் என வேளாண்மை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**தேனி மாவட்டத்தில் காணை நோய் தடுப்பூசி முகாம்கள் கலெக்டர் ஆய்வு**



தேனி மாவட்டத்தில், கால் நடைகளுக்கு கால் மற்றும் வாய் காணை நோய் தடுப்பூசி போடும் சிறப்பு முகாம்கள் நேற்று தொடங்கியது. இந்த முகாம்கள் அடுத்த மாதம் (ஏப்ரல்) 6-ந்தேதி வரை நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் 130 ஊராட்சி கள், 22 பேரூராட்சிகள், 6 நகராட்சிகள் என அனைத்து பகுதிகளிலும் பிறந்து 6 மாதங்கள் கடந்த கால்நடை களுக்கு இந்த தடுப்பூசி போடும் சிறப்பு

முகாம்கள் நடத்தப்பட உள்ளது. கோட்டூரில் நடந்த சிறப்பு முகாமை மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது கலெக்டர் கூறுகையில், 'இந்த சிறப்பு முகாம்களுக்கு 34 கால்நடை மருத்துவ குழுக்கள் அமைக்கப் பட்டு உள்ளன. மொத்தம் 613 கிராமங்களில் முகாம் நடத்தப்பட உள்ளது. இந்த பணியில் 35 கால்நடை உதவி மருத்துவர்கள், 34 கால்நடை ஆய்வாளர்கள், 45 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் ஈடுபடுகின்றனர். முகாம்கள் குறித்து முன்னறிப்பு செய்யப்படும். எனவே தங்க ளது கிராமங்களில் முகாம்கள் நடக்கும் போது கால்நடை வளர்ப்பவர்கள் இதனை தவ றாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்றார்.

**பேரையூரில் 3 மணி நேரம் மழை**



**பேரையூர்,**

தமிழகத்தில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் நீர்நிலைகள் டிசம்பர் மாதமே வறண்டு விட்டன. கோடைகாலம் துவங்குவதற்கு இன்னும் 2 மாதங்கள் இருந்தாலும் இப்போதே பல இடங்களில் அனல் பறக்கும் வெயில் மக்களை வாட்டி வதைக்க தொடங்கி விட்டது. நீர்நிலைகளே வறண்டுபோனதால் விளைநிலங்களும் பாளம், பாளமாக வெடித்தன. கால்நடைகளுக்கும் பசுந்தீவனம் கிடைக்காத அளவுக்கு புல் பூண்டுகள் கூட முளைக்காமல் வறட்சி ஏற்பட தொடங்கியது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் வளிமண்டலத்தின் மேல் அடுக்கில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதியில் இதமான சூழல்நிலவியது. நேற்று காலை 6 மணியளவில் பேரையூர் மற்றும் மேலப்பட்டி உள்பட சுற்றுவட்டார பகுதியில் மழை பெய்ய தொடங்கியது. காலை 9 மணி வரை 3 மணி நேரம் பெய்த பலத்த சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மேற்குத்தொடர்ச்சி மலையிலும் பெய்த மழையால் வறண்டு கிடந்த காட்டாறுகளில் தண்ணீர் ஓடியது. மழையால் வெப்பம்

தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டதால் பேரையூர் மற்றும் சுற்றுவட்டாரப்பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையில் "வரத்து குறைந்ததால் 3 மாதத்துக்கு முன்பே கரும்பு அரவை நிறுத்தம்"**

**அலங்காநல்லூர்,**

அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வரத்து குறைந்ததால் 3 மாதங்களுக்கு முன்பே அரவை நிறுத்தப்பட்டது.

**<u>சர்க்கரை ஆலை</u>**

அலங்காநல்லு£ரில் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது. இந்த ஆலையில் ஒவ்வொரு ஆண்டும் கரும்பு அரவை பருவம் டிசம்பர் மாதம் தொடங்கி ஜூன் மாதம் வரை நடைபெறும். கடந்த ஆண்டுக்கான சீசன் டிசம்பர் 5–ந் தேதி தொடங்கியது. ஜூன் மாதம் அரவை நடைபெற வேண்டிய நிலையில் கரும்பு அரவை மார்ச் 1–ந் தேதியே நிறுத்தப்பட்டு விட்டது. 2013–2014 ஆம் ஆண்டில் 7 ஆயிரத்து 600 ஏக்கர் கரும்பு விவசாயிகளால் பதிவு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் 1,200 ஏக்கரில் கரும்பு பயிர் தண்ணீர் இல்லாமல் மகசூல் பாதிக்கப்பட்டது. இதனால் கரும்பு வரத்து குறைந்தது. அதன் எதிரொலியாகவே கரும்பு அரவையும் மார்ச் 1–ந் தேதியுடன் நின்றது.

**<u>உற்பத்தி குறைவு</u>**

அதே நேரத்தில் அதற்கு முந்தய அரவை சீசன் 1.12.2012 அன்று கரும்பு அரவை தொடங்கி மே மாதம் 3–ந் தேதி வரை நடந்தது. அப்போது 2 லட்சத்து 52 ஆயிரத்து 39 டன் கரும்பு அரவை செய்யப்பட்டது. அதன் மூலம் 2 லட்சத்து 6 ஆயிரத்து 490 மூடை சர்க்கரை உற்பத்தியானது. ஆனால் 2013–14ம் ஆண்டில் லட்சத்து 23ஆயிரத்து 492 டன் அளவுக்கே கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 1 லட்சத்து 16ஆயிரத்து 810 மூடைகள் மட்டுமே சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சர்க்கரை கட்டுமானம் 9.9 என்ற வீதத்தில் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த ஆண்டு பருவமழை கைகொடுத்ததால்தான் கரும்பு விவசாயிகளின் வாழ்வில் மலர்ச்சி ஏற்படும். அதன் மூலம் ஆலையில் கரும்பு அரவையும் அதிகரித்து சர்க்கரை உற்பத்தியும் அதிகமாகும். எனவே இந்த ஆண்டு மழை கொடுக்க வேண்டும் என விவசாயிகள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோயம்பேடு சந்தையில் காய்கறிகளின் விலை வீழ்ச்சி

- 

- சென்னையில் காய்கறிகளின் விலை நிலவரம் (1கிலோ-ரூபாயில்...)

| காய்கறி பெயர் | கோயம்பேடு மார்க்கெட் | பண்ணை பசுமை கடை | ஜாம்பஜார் மார்க்கெட் | புரசை மார்க்கெட் |
|---|---|---|---|---|
| தக்காளி | 7 | 9 | 8 | 10 |
| வெங்காயம் | 15 | 14 | 18 | 18 |
| சாம்பார் வெங்காயம் | 30 | 24 | 40 | 30 |
| பச்சை மிளகாய் | 20 | 24 | 30 | 30 |
| கத்தரிக்காய் | 12 | 16 | 20 | 20 |
| உருளைக் கிழங்கு | 20 | 24 | 20 | 20 |
| அவரைக்காய் | 30 | 2 | 60 | 60 |
| வெண்டைக்காய் | 25 | 24 | 25 | 40 |
| முள்ளங்கி | 20 | - | 30 | 24 |
| பாகற்காய் | 25 | 22 | 30 | 40 |
| பீன்ஸ் | 40 | 38 | 45 | 50 |
| முட்டைக் கோஸ் | 10 | 12 | 15 | 15 |
| கேரட் | 25 | 24 | 30 | 40 |
| பீட்ரூட் | 20 | 25 | 30 | 20 |
| சவ்சவ் | 20 | 20 | 20 | 24 |
| புடலங்காய் | 20 | 20 | 30 | 24 |
| வெள்ளரிக்காய் | 20 | 15 | 20 | 24 |
| கோவைக்காய் | 20 | 18 | 25 | 24 |
| காலிபிளவர் | 15 | 15 | 15 | 20 |
| முருங்கைகாய் | 40 | 40 | 50 | 50 |

காய்கறி வரத்து அதிகரிப்பால், கோயம்பேடு சந்தையில் காய்கறிகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

தமிழகம், ஆந்திரம், மகாராஷ்டிரா, கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து கோயம்பேடு சந்தைக்கு வரும் காய்கறிகளின் வரத்து கடந்த நான்கு மாதங்களாக அதிகரித்து வருகிறது. இதனால் காய்கறிகளின் விலை குறைந்து வருகிறது.

இதுகுறித்து, கோயம்பேடு சந்தை காய்கறி வியாபாரிகள் சங்கங்களின் ஆலோசகர் வி. ஆர். சவுந்தரராஜன் தெரிவித்ததாவது:

தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து, கோயம்பேடு சந்தைக்கு வெங்காயம், பீன்ஸ், தக்காளி, உருளைக்கிழங்கு, கேரட், முட்டைக்கோஸ், கத்தரிக்காய், பீன்ஸ், சாம்பார் வெங்காயம், உள்ளிட்ட காய்கறிகள் நாள் தோறும் வருகின்றன. சராசரியாக 220 முதல் 240 லோடுகள் வரை வருவது வழக்கம்.

தற்போது காய்கறிகளின் விளைச்சல் அதிகரித்ததால், கடந்த நவம்பரில் இருந்து கோயம்பேடு சந்தைக்கு வரும் காய்கறி லாரிகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து, தற்போது 300 முதல், 350 லாரிகள் வந்துக் கொண்டிருக்கின்றன.

இதனால், கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு சில்லறை விலையில், கிலோ ரூ.100- க்கு விற்ற வெங்காயம் தற்போது ரூ.15-க்கும், ரூ. 25- க்கு விற்ற கத்தரிக்காய் ரூ.12- க்கும், ரூ.40-க்கு விற்ற தக்காளி ரூ.7- க்கும் கோயம்பேடு சந்தையில் சில்லறை விலையில் விற்கப்படுகின்றன.

அதே போல் ஒரு மாதத்துக்கு முன் ரூ.15 க்கு விற்ற ஒரு முருங்கைகாய், தற்போது ரூ.2 க்கு விற்கப்படுகிறது. முட்டைக்கோஸ் கிலோ 10 ரூபாய்க்கும், உருளைக் கிழங்கு, பச்சை மிளகாய், புடலங்காய், கேரட்ஆகியவை கிலோ 20 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன.

இவ்வாறு வி. ஆர். சவுந்தரராஜன் தெரிவித்தார்.